(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-11

சுட்டெண்:- .....

வினாத்தாள் - I

நேரம் :- 1 மணித்தியாலம்

- பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
  - உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

* இலக்கம் (01), (02) ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்புடைய இரு உருக்களையும் குறிக்கும் எழுத்துக்களைக் கொண்ட விடையின் கீழ்க் கோடிடுக.

(01)



A B C D E

(1) A உம் C உம் (2) B உம் E உம் (3) C உம் D உம்

(02)



A B C D E

(1) A உம் E உம் (2) B உம் E உம் (3) A உம் D உம்


(03)

2	7	A
9	5	1
4	B	8

இவ்வுருவிலுள்ள இலக்கங்களைக் கிடையாகவும் நிலைக்குத்தாகவும் கூட்டும்போது சமனான எண்ணிக்கை வரக்கூடிய விதத்தில் வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான இலக்கங்களைக் கொண்ட விடை,

(1) A = 6 , B = 2 (2) A = 5 , B = 3 (3) A = 6 , B = 3

(04)




இத்தின்மங்களை அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்த்தால் புலப்படும் முறை,

(1)  (2)  (3) 




(05) நாணயக் குற்றிக் குவியலில் ரூபாய் 5.00 நாணயக் குற்றிகளும் ரூபாய் 1.00 நாணயக் குற்றிகளும் சமனான எண்ணிக்கை வீதம் உள்ளன. நாணயக் குற்றிக் குவியலிலுள்ள நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி ரூபாய் 54.00 ஆகும். அதன்படி, நாணயக் குற்றிக் குவியலிலுள்ள ரூபாய் 1.00 நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை,

(1) 9 (2) 8 (3) 6

(06)



உருவில் காணப்படும் மின்விசிறியை அம்புக்குறி காட்டும் திசைக்கு $\frac{3}{4}$ சுற்று சுற்றும்போது காணக்கிடைக்கும் முறை,

(1)  (2)  (3) 

(07) தாயக்கட்டை ஒன்றை மேலே சுண்டிவிடப்பட்டபோது மூன்று முகங்கள் விழுந்த தடவைகளின் எண்ணிக்கைகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

விழுந்த முகங்களின் இலக்கங்கள்	1	2	3	4	5	6
விழுந்த தடவைகளின் எண்ணிக்கை	.....	4	.....	2	.....	3

1, 3, 5 ஆகிய முகங்கள் விழுந்த தடவைகளின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகை 6 விழுந்த தடவைகளின் எண்ணிக்கையைப்போல் 4 மடங்காகும். அதன்படி, தாயக்கட்டை மேலே சுண்டிவிடப்பட்ட மொத்த தடவைகளின் எண்ணிக்கை,

(1) 12 (2) 21 (3) 24

www.ikeduk

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk

(08)

பழங்கள்	.....
தானியங்கள்	கரட்
மரக்கறிகள்	அன்னாசி

இவ்வட்டவணையில் சொற்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான சொல்,

(1) சீனி (2) வற்றாளை (3) குரக்கன்

(09)



மாலை வேளையில் இரு பிள்ளைகளின் நிழல்கள் விழுந்திருக்கும் முறையினை இவ்வுரு காட்டுகின்றது. அதன்படி, கதிர் இருப்பது மோகனுக்கு,

(1) கிழக்குத் திசையிலாகும். (2) மேற்குத் திசையிலாகும்.
(3) வடக்குத் திசையிலாகும்.

(10) 6, 8, 11, 15, 20, ☐ இவ்வெண்கோலத்தில் வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான எண்,

(1) 28 (2) 26 (3) 24


(11) ஓட்டப் போட்டியொன்றை ரஞ்சித், நிமால், இம்ரான் ஆகிய வீரர்கள் நிறைவு செய்த நேரங்கள் கீழே கடிகார முகங்களினால் காட்டப்பட்டுள்ளன.



அருகேயுள்ள தகவல்களின்படி, ஓட்டப்போட்டியில் 1, 2, 3 ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்ட வீரர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,

(1) நிமால் - ரஞ்சித் - இம்ரான் (2) இம்ரான் - ரஞ்சித் - நிமால்
(3) ரஞ்சித் - நிமால் - இம்ரான்


(12)



அமீன் மற்றும் நிஸார் ஆகிய இருவரும் P எனும் இடத்திலிருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டு அம்புக்குறிகளினால் காட்டப்பட்டுள்ளபடி எதிர்த்திசைகளில் வட்டத்தினூடே ஓடி R எனும் இடத்தில் இருவரும் சந்தித்தனர். அதன்படி, கீழேயுள்ள கூற்றுக்களின் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) நிஸாரை விட அமீன் கூடிய வேகத்தில் ஓடினான்.
(2) அமீரை விட நிஸார் கூடிய வேகத்தில் ஓடினான்.
(3) இருவரும் சமனான வேகத்தில் ஓடினார்கள்.

(13)



இம்முக்கோண வடிவக் காணியை அம்புக்குறிகளால் காட்டப்பட்டுள்ள எந்தவொரு திசையில் இருந்து பார்த்தாலும் உருவில் தென்படும் முறையிலான 8 கம்பித்தூண்கள் தென்படும். அதன்படி, இம்முக்கோண வடிவக் காணியைச் சுற்றியுள்ள மொத்தக் கம்பித்தூண்களின் எண்ணிக்கை,

(1) 24 (2) 20 (3) 21


(14)



இப்பிள்ளையின் இடது கை வடகிழக்குத் திசையை நோக்கி நீட்டப்பட்டுள்ளது. அதன்படி, இப்பிள்ளை பார்த்துக்கொண்டிருப்பது,

(1) தென்மேற்குத் திசையையாகும். (2) தென்கிழக்குத் திசையையாகும்.
(3) வடமேற்குத் திசையையாகும்.

(15) பிள்ளையொன்று ஒரேயளவு நீளத்திலான ஈர்க்குத் துண்டுகளையும் மாபிள்களையும் பயன்படுத்தி 1 ஆம், 2 ஆம், 3 ஆம் கோலங்களை அமைத்தது,



அதன்படி, ஐந்தாவது கோலத்தை அமைப்பதற்கு அப்பிள்ளைக்குத் தேவைப்படும் ஈர்க்குத் துண்டுகளினதும் மாபிள்களினதும் எண்ணிக்கை,

(1) ஈர்க்குத் துண்டுகள் - 10, மாபிள்கள் - 8
(2) ஈர்க்குத் துண்டுகள் - 12, மாபிள்கள் - 7
(3) ஈர்க்குத் துண்டுகள் - 11, மாபிள்கள் - 7

(16) ஒவ்வொரு நாளும் மரத்தில் உள்ள பூக்களின் எண்ணிக்கை 4 வீதம் அதிகரிக்கும். அம்மரத்தில் நேற்று முன்தினம் இருந்த பூக்களின் எண்ணிக்கை 5 ஆகும். அதன்படி, அம்மரத்தில் நாளை மறுதினம் இருக்கக்கூடிய பூக்களின் எண்ணிக்கை,

(1) 21 (2) 17 (3) 25

(17) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள A மற்றும் B இடைவெளிகளுக்குரிய மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

..... A ..... நாம் ..... B ..... கடினமாக உழைக்க வேண்டும்.

(1) A - இறந்தகாலத்திற்காக, B - எதிர்காலத்தில் (2) A - எதிர்காலத்திற்காக B - நிகழ்காலத்தில்
(3) A - நிகழ்காலத்திற்காக, B - எதிர்காலத்தில்

(18) ஒரு பிரதேசத்தில் செங்கல், ஓடு தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. அதற்கான பிரதான காரணமாக இருக்கக்கூடியது,

(1) அப்பிரதேசத்தில் களிமண் அதிகமாக உள்ளதனால்.
(2) அப்பிரதேசத்தில் ஓடுகள் வேயப்பட்ட வீடுகள் அதிகமாக இருப்பதனால்.
(3) அப்பிரதேசம் கடலுக்கு அருகில் இருப்பதனால்.

www.ikeou.lk


(19) பிள்ளையொன்றிடம் 30 சிறிய சதுரமுகிகள் உள்ளன. அப்பிள்ளை அச்சதுரமுகிகள் சிலவற்றை ஒன்றுடன் ஒன்று ஒட்டி ஒரே அளவான மூன்று பெரிய சதுரமுகிகளை அமைத்தது. அதன்படி, அப்பிள்ளையிடம் மீதியாகவுள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 7 (2) 5 (3) 6

(20) பெட்டியொன்றில் மஞ்சள் நிறப் பந்துகள் 5 உம், சிவப்பு நிறப் பந்துகள் 7 உம், சிவப்பு நிறமற்ற பந்துகள் 15 உம் உள்ளன. அதன்படி, பெட்டியிலுள்ள மொத்தப் பந்துகளின் எண்ணிக்கை,

(1) 27 (2) 22 (3) 20


(21)



திவ்யா வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்று மீண்டும் வீட்டிற்கு வரும் பாதை இவ்வுரு காட்டுகின்றது. அதன்படி, அவள் மிகக் குறைந்த தடவைகள் பயணித்துள்ளது.

(1) கிழக்குத் திசைக்கு (2) தெற்குத் திசைக்கு (3) மேற்குத் திசைக்கு

(22) பின்வரும் வட்டங்களினுள் உருக்கள் ஒரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, நான்காவது வரிசையில் வெற்றுவட்டங்களுக்குப் பொருத்தமான கோலத்தைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

(23) எப்பொழுதும் உண்மையாகும் கூற்றைத் தெரிவு செய்க.

(1) சகல முக்கோணங்களுக்கும் செங்கோணங்கள் உள்ளன. (2) சகல தீண்மங்களுக்கும் விளிம்புகள் உள்ளன.


(3) சகல சதுரங்களுக்கும் 4 சமச்சீர் அச்சுக்கள் உள்ளன.


(24) A, B ஆகியோர் ஒரே குடும்பத்திலுள்ள இரண்டு பிள்ளைகளாவர். A இற்கு 4 சகோதரர்களும் 5 சகோதரிகளும் உள்ளனர். B இற்கு 3 சகோதரர்களும் 6 சகோதரிகளும் உள்ளனர். அதன்படி, கீழே தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

(1) A ஒரு ஆண் பிள்ளையாகும். B ஒரு பெண் பிள்ளையாகும்.

(2) A ஒரு பெண் பிள்ளையாகும். B ஒரு ஆண் பிள்ளையாகும். (3) A, B ஆகிய இருவரும் பெண் பிள்ளைகளாவர்.

(25) மிகக் குறைந்த தொடர்புள்ள உருச்சோடியைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 


(26) விலங்குப் பண்ணையொன்றில் இருக்கும் எருதுகளின் கால்களின் எண்ணிக்கையினதும், கண்களின் எண்ணிக்கையினதும் கூட்டுத்தொகை 36 ஆகும். அதன்படி, அவ்விலங்குப் பண்ணையிலிருக்கும் எருதுகளின் கால்களின் எண்ணிக்கை,

(1) 16 (2) 24 (3) 20

(27) "APPEAR" எனும் சொல்லைக் குறியீடுகளினால் எழுதுவதற்குத் தேவைப்படும் குறியீட்டு வகைகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 6 (3) 5

*** இவ்வுருவின்படி, இலக்கம் (28), (29) ஆகிய வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**



(28) உருவின்படி, பெண் பிள்ளைகள் எத்தனைப் பேர் இருக்கின்றனர்?


(1) 2 (2) 5 (3) 4

(29) A யிற்குப் பொருத்தமானப் பெயர்,

(1) பெண் பிள்ளைகள் (2) உயரமான ஆண் பிள்ளைகள்


(3) குட்டையான பெண் பிள்ளைகள்

www.keau.lk

(30) 

மேலே காட்டப்பட்டுள்ள உருக்களில் செங்கோணங்கள் மட்டும் காணக்கிடைக்கும் உருக்களின் எண்ணிக்கை,

(1) 3 (2) 2 (3) 4

(31) 

இவ்வுருவில் வெற்றுப்பெட்டியொன்று காட்டப்பட்டுள்ளது. இப்பெட்டியினுள் ஒரு பக்க நீளம் 2cm ஐக் கொண்ட சதுரமுகிகள் எத்தனை வைக்க முடியும்?

(1) 8 (2) 6 (3) 12

(32)



உரு A



உரு B

பிள்ளையொன்றினால் வரையப்பட்டுள்ள 2 கத்தரிக்கோல்கள் உரு A மற்றும் உரு B யினால் காட்டப்பட்டுள்ளன. வரையப்பட்டுள்ள முறைகளின்படி, இவ்விரண்டு உருக்களில்,


(1) உரு A சரியானது, உரு B பிழையானது.

(2) உரு A பிழையானது, உரு B சரியானது.

(3) இரண்டு உருக்களும் சரியானவை.


(33) செவ்வக வடிவ கம்பிச்சட்டகமொன்றின் நீளம் 7cm ஆகும். அகலம் 5cm ஆகும். இக்கம்பிச்சட்டகத்தினால் அமைக்கக்கூடிய சகல பக்கங்களும் நீளத்தால் சமனான முக்கோணமொன்றின் ஒரு பக்க நீளம்,

(1) 8 cm (2) 6 cm (3) 9 cm

(34) 

இப்பெரிய சதுர வடிவக் கடதாசி, சிறிய சதுர வடிவமொன்றாக கிடைக்குமாறு நான்காக மடிக்கப்பட்டது. அதன்படி, அச்சிறிய சதுர வடிவத்தின் ஒரு பக்க நீளம்,

(1) 2 cm (2) 4 cm (3) 3 cm

(35) 



இக்கனவுருவிலிருந்து வெட்டக்கூடிய மிகப் பெரிய சதுரமுகியின் ஒரு பக்க நீளம்,

(1) 5 cm (2) 6 cm (3) 4 cm

(36) முதலில் தரப்பட்டுள்ள மூன்று உருக்களும் ஒரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



உரு 1 உரு 2 உரு 3


(1)  (2)  (3) 

(37) "நான்கு ஒன்பதை விட சிறியது" என்பதை எழுதுவது 4 → 9 இவ்வாறாகும். "ஏழு மூன்றை விட பெரியது" என்பதை எழுதுவது 7 ← 3 இவ்வாறாகும். அதன்படி, பின்வருவனவற்றில் சரியானது,

(1) 2 → 5 ← 1 (2) 7 → 9 → 4 (3) 4 ← 3 → 2

(38) எமது வகுப்பில் என்னை விட உயரமான மாணவர்களின் எண்ணிக்கை, என்னை விட குட்டையான மாணவர்களின் எண்ணிக்கையைப்போல் இரண்டு மடங்காகும். எமது வகுப்பில் என்னை விட குட்டையான மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆகும். அதன்படி, வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை,

(1) 33 (2) 22 (3) 34

(39) 

இப்பெரிய கனவுருவிலிருந்து நிழற்றப்பட்டுள்ள அளவிலான கனவுருக்கள் எத்தனை வெட்ட முடியும்?

(1) 10
(2) 9
(3) 8

(40) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

செக்கச் சிவந்த செங்கதி ரோனும்
கிழக்கினில் வந்து விட்டான் - புவி
மக்கள் கண் விழித்துக் கிளம்பிட
வானில் உதித்து விட்டான்.

பாடலில் எதன் சிறப்பு எடுத்துக்கூறப்படுகின்றது?

(1) புவி (2) வானம் (3) சூரியன்

www.lkedu.lk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-11

வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - * **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - * **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

நாட்டார் பாடல்கள் மிகவும் எளிமையானவை. உள்ளதை உள்ளபடியே சொல்லுபவை. உள்ளத்தை ஈர்க்கும் இனிமை மிக்கவை. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தும் கிராமிய மக்களின் உணர்ச்சிகளை அப்படியே வெளிப்படுத்துபவை. இப்பாடல்கள் கிராமத்து மக்களது கூட்டு வாழ்க்கையை எடுத்துக்காட்ட உதவுபவை. குழுவாகச் சேர்ந்து வேலை செய்யும்போதும், விழாக்கள் கொண்டாடும்போதும், களியாட்டங்களின்போதும் நாட்டார் பாடல்கள் பெரும்பாலும் பாடப்படுகின்றன.

(i) கிராமியப் பாடல்கள் என்று கூறப்படுவது எதனை? .....

(ii) "கவரும்" என்பதற்குரிய ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக. .....

(iii) "செயற்கையோடு" என்பதன் எதிர்ப்பதத்தினை பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக. .....

(iv) இப்பாடல்கள் பெரும்பாலும் பாடப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டை எழுதுக. .....

(v) "உணர்ச்சிகளை" என்பதன் ஒருமை வடிவம் யாது? .....

(02) பின்வரும் பெண்பால் வாக்கியத்தை ஆண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

உழத்தி வயலில் அரிவி வெட்டினாள். :- .....

(03) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன் :- .....

(ii) ஒன்றுபோல் இருக்கும் மற்றொன்று :- .....

(04) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

(i) மலை + உச்சி :- ..... (ii) நன்மை + செய்தி :- .....

(05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) தினமும் சிறிது நேரம் ..... (உலவு , உளவு , உழவு) வது உடல் நலத்திற்கு நல்லது.

(ii) அதிகாலையில் ஆலயத்திலிருந்து பூஜை மணி ..... (ஒளி, ஒலி, ஒழி) கேட்டது.

(06) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாக எழுதப்பட்டிருப்பின் (✓) எனவும், பிழையாக எழுதப்பட்டிருப்பின் (✗) எனவும் வாக்கியத்திற்கு எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.

(i) அக்கா அம்மாவுடன் மாமி வீட்டிற்குச் சென்றாள். ( ) (ii) நுளம்புகள் டெங்கு நோயைப் பரப்புகின்றது. ( )

(iii) ஆசிரியர் கூறுவதை மாணவர்கள் அவதானமாகக் கேட்டன. ( )

(07) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.

(i) இ. பெ. கூ :- ..... (ii) இ. போ. ச :- .....

(08) பின்வரும் தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக எழுதுக.

குமார் கடைக்குச் செல்ல, அவனின் பின்னால் நாயும் சென்றது.

(i) ..... (ii) .....

(09) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பயனிலையை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) தாயைக் காணாது குழந்தை ..... (அழுதான், அழுதாள், அழுதது)

(ii) உணவு, உடை ஆகியவற்றின் செலவு ..... (அதிகரித்தது, அதிகரித்தன, அதிகரிக்கின்றன)

(iii) கமலா பாட்டுப்பாட மாலா ..... (நடனமாடினான், நடனமாடினாள், நடனமாடினார்கள்)

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

(10) **(i) பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான பழமொழியைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

கருத்து :- கோபம் வருமிடத்து நிதானம் குறைந்துவிடும்.

(முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் / ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்)

(ii) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

அடிமேல் அடி அடித்தால் ..... நகரும்.

(11) தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)  :- .....

(ii)  :- .....

(12) தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(i) Ships :- ..... (ii) Water :- .....

(13) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(i) Please sit down :- ..... (ii) Where do you live ? :- .....

(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.


அ(ப்)பி வ(த்)துற பொழு :- .....

(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

புத்தகத்தை எடுங்கள் :- .....

(16) பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

6707 , 7309 , 6077 , 7099 :- .....

(17)  இவ்வுருவில் $\frac{2}{3}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.

(18) (i) 99999 + 1 இன் பெறுமானம் யாது? .....

(ii) 1, 3, 9, 27,81, ☐ இவ்வெண்கோலத்தில் வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான எண்ணை வெற்றுக்கூட்டினுள் எழுதுக.

(19) பின்வரும் அட்டவணையை நிரப்புக.

எண் பெயர்	இந்து அரபிய எண்குறி	உரோம எண்குறி
பத்தொன்பது		

(20) பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை கூட்டினுள் இருந்து தெரிவுசெய்து உரிய வெற்றிடங்களில் எழுதுக.

நான்முகி , சதுரமுகி , உருளை , கனவுரு

(i) இரு வட்ட முகங்கள் உள்ள திண்மம் யாது? .....

(ii) 8 உச்சிகளும், 12 விளிம்புகளும் உள்ள திண்மங்கள் யாவை? .....

(iii) முக்கோண முகங்கள் மாத்திரம் உள்ள திண்மம் எது? .....

(21) ஒரு பாத்திரத்தில் இருந்த மண்ணெண்ணெயில் 12*l* 750*ml* ஐப் பயன்படுத்திய பின்னர் 6*l* 250*ml* மண்ணெண்ணெய் எஞ்சியிருந்தது. எனின், தொடக்கத்தில் பாத்திரத்தில் இருந்த மண்ணெண்ணெயின் அளவு யாது? .....

(22) கடையொன்றில் வைக்கப்பட்டிருந்த விலைப்பட்டியல் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. அவ்விலைப்பட்டியலின்படி, பின்வரும் வினாக்களுக்கு விடைகளை எழுதுக.

விலைப்பட்டியல்

	ரூபாய்	சதம்
பேனை - 1	18	25
அடிமட்டம் - 1	9	50
புத்தகம் - 1	20	75
பென்சில் - 1	8	00

(i) பேனையொன்றினதும் புத்தகமொன்றினதும் விலை யாது? .....

(ii) பென்சில் ஒன்றினையும் அடிமட்டம் ஒன்றினையும் கொள்வனவு செய்து வியாபாரிக்கு ரூபாய் 20.00 நாணயத் தாள் ஒன்றினைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? .....

(23) பையொன்றில் 4kg 650g சீனி இருந்தது. அதற்குள் மேலும் 2kg 700g சீனி இடப்படுகின்றது. இப்போது பையிலுள்ள சீனியின் மொத்த நிறை யாது? .....

(24) 24 மணித்தியாலக் கடிகாரம் 00:00 எனக் காட்டும்போது 12 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது? .....

www.ikedu.lk

சுட்டெண்:.....

(25) கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரை சென்ற கடுகதிப் பேருந்து ஒன்றின் பயண விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- இடைவழியில் உணவுத் தரிப்பிடத்திற்கு வந்த நேரம் :- மு.ப 11:30
- உணவிற்காக நிறுத்தப்பட்டிருந்த நேரம் :- 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்.
- உணவு தரிப்பிடத்திலிருந்து அநுராதபுரத்தை அடைவதற்கு எடுத்த நேரம் :- 3 மணித்தியாலங்கள் 15 நிமிடங்கள்.

மேலேயுள்ள தகவல்களுக்கேற்ப, பேருந்து அநுராதபுரத்தை அடைந்த நேரம் யாது? .....


(26)

$$\begin{array}{r} \square\,9\,5 \\ +\ \square\,8\,4 \\ \hline 9\,7\,9 \end{array}$$

அருகில் காட்டப்பட்டுள்ள வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான **இரு இலக்கங்களையும்** வெற்றுக்கூடுகளின் உள்ளேயே எழுதுக.

(27) ரூபாய் 68.00 பெறுமானமுள்ள பொருட்களை வாங்கிய ரவி வியாபாரியிடம் ரூபாய் 100.00 நாணயத் தாளொன்றையும் ரூபாய் 18.00 இனையும் கொடுத்தான். அவனுக்கு கிடைக்க வேண்டிய மீதிப் பணம் எவ்வளவு? .....

(28) நான்கு விளையாட்டு வீரர்கள் 100 மீற்றர் ஓட்டப்போட்டியை முடிக்க எடுத்துக்கொண்ட நேரங்கள் கீழே வரைபில் காட்டப்பட்டுள்ளன.



ஓட்டப்போட்டியில் 1, 2, 3 ஆம் ஆகிய இடங்களைப் பெற்றுக்கொண்ட விளையாட்டு வீரர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் எழுதுக.

.....

.....

.....

(29)



A, B, C ஆகிய 3 பிள்ளைகள் பயணித்த திசைகள் அம்புக்குறிகளினால் காட்டப்பட்டுள்ளன. C' வடகிழக்குத் திசையில் பயணித்தது எனின், A, B ஆகிய பிள்ளைகள் பயணித்த திசைகளை ஒழுங்குமுறையில் எழுதுக. .....

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) ஊவா, வடமத்திய, வடமேல் என்பவை இலங்கையின்,
(1) மூன்று திசைகள் (2) மூன்று மாவட்டங்கள் (3) மூன்று மாகாணங்கள்

(31) ஏழு வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள இடம்,
(1) திருகோணமலை (2) அநுராதபுரம் (3) நுவரெலியா

(32) மழை வரும் முன்னே தோகை விரித்தாடும் பறவை,
(1) முள்ளம்பன்றி (2) காட்டுக்கோழி (3) மயில்

(33) சூரிய கிரகணம் நிகழ்வது,
(1) பௌர்ணமி தினத்தில் (2) அமாவாசை தினத்தில் (3) பூர்வபக்க அட்டமி தினத்தில்

(34) நாக்கில்லாத பிராணி,
(1) முதலை (2) தவளை (3) பல்லி

(35) தாவரச் சாற்றை உறிஞ்சும் நுளம்பு,
(1) பெண் நுளம்பு (2) ஆண் நுளம்பு (3) டெங்கு நுளம்பு

(36) இலங்கையின் தேசிய மிருகம்,
(1) மரஅணில் (2) காட்டுக்கோழி (3) சிங்கம்

(37) பாராளுமன்றத்தைச் சுற்றியோடும் ஓயா,
(1) மல்வத்து ஓயா (2) கிரிந்தி ஓயா (3) தியவன்னா ஓயா

(38)  இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள சங்கீத உபகரணம்,
(1) சித்தார் (2) சல்லாரி (3) வீணை

(39) பேசுவதற்குப் பயிற்றுவிக்கக்கூடிய இரண்டு பறவைகள்,
(1) ஆந்தை, கொக்கு (2) குயில், பருந்து (3) கிளி, மைனா

(40) இலங்கையின் சனத்தொகைச் செறிவு மிக்க மாவட்டம்,
(1) திருகோணமலை (2) கொழும்பு (3) கண்டி

www.ikeou.lk

(41) இரவு நேரத்தில் பூக்கும் பூக்களில் காணப்படாத அம்சம்,
(1) வெண்மை (2) நறுமணம் (3) பல்வேறு நிறங்கள்

(42) ஆழமற்ற குளக்குட்டைகளில் மீன் பிடிக்க உதவும் உபகரணம்,
(1) நங்கூரம் (2) கரப்பு (3) நாம்புவ

(43) இலங்கை அரச இலச்சினையில் சூரியனும் சந்திரனும் அடையாளப்படுத்துபவை,
(1) நிலைத்திருத்தலை ஆகும். (2) தன்னிறைவை ஆகும். (3) சௌபாக்கியத்தை ஆகும்.

(44) உணவு உட்கொள்ளல் தொடர்பாக எம்மிடம் இருக்க வேண்டிய சிறந்த பழக்கம்,
(1) இனிப்புச் சுவையுடைய உணவுகளை அதிகமாக உண்ணல்.
(2) உடனடி உணவுகளை அடிக்கடி பயன்படுத்தல். (3) தினமும் வேளையுணவை உரிய நேரத்தில் உட்கொள்ளல்.

(45) எலியின் உடலில் வாழும் தெள்ளு மூலம் பரவும் நோய்,
(1) நீர்வெறுப்பு (2) கொள்ளை நோய் (3) சிக்குன்குன்யா

(46) ஆழமான கிணறுகளிலிருந்து நீரை மேலே எடுப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்,
(1) கப்பி (2) துருத்தி (3) பற்சில்லு

(47) ஆபத்து வேளையின்போது விசேட ஒலி எழுப்பி பிரதான வீதிகளில் பயணிக்கும் வாகனம்,
(1) தபால் திணைக்களத்திற்கு உரிய வாகனங்கள். (2) நோயாளர் வண்டிகள். (எம்பியுளன்ஸ்)
(3) பாடசாலை பேருந்துகள்.

(48) குளிர் பிரதேசங்களில் மிக விரைவாக உறையும் பொருள்,
(1) நீர் (2) பெற்றோல் (3) தேங்காயெண்ணெய்

(49) பௌர்ணமி தினத்திலிருந்து ஏழு நாட்களுக்கு பிறகு வருவது,
(1) அபரபக்க அட்டமி (2) பூர்வபக்க அட்டமி (3) அமாவாசை.

(50)  உருவில் காட்டப்பட்டுள்ள உடுத்தொகுதி,
(1) விருட்சிகம் (2) கலப்பை (3) தென்சிலுவை

(51) கலப்புணவு என்பது,
(1) நன்கு கலந்த உணவு (2) சகல போசணைப் பதார்த்தங்களும் அடங்கிய உணவு
(3) தோட்டத்தில் இருந்து கிடைக்கும் காய்கறிகள் மூலம் சமைக்கப்படும் உணவு.

(52) ரெஜிபோம் துண்டு ஒன்றை பெற்றோல் உள்ள பாத்திரமொன்றில் இடும்போது நாம் அவதானிக்கக் கூடியது,
(1) ரெஜிபோம் துண்டு மிதக்கும். (2) ரெஜிபோம் துண்டு அமிழும். (3) ரெஜிபோம் துண்டு கரையும்.


(53) செம்மஞ்சள் நிறத்தைப் பெறக் கலக்க வேண்டிய நிறங்கள்,
(1) சிவப்பு, மஞ்சள் (2) நீலம், மஞ்சள் (3) சிவப்பு, நீலம்


(54) கறையானின் அடுத்தப் பருவம்,
(1) வண்ணத்துப்பூச்சி (2) ஈசல் (3) குளவி

(55) அணில் பாயும்போது உடற்சமநிலையை பேணும் உறுப்பு,
(1) வால் (2) கால்கள் (3) தலை

(56) பாதுகாப்புக் கண்ணாடி அணிந்து தொழில் செய்பவர்,
(1) குயவன் (2) தச்சன் (3) உருக்கி ஒட்டுபவர்.

(57) யானைகள் சரணாலயம் அமைந்துள்ளது,
(1) குமண (2) பின்னவல (3) தெஹிவளை

(58) செமன் டின் ஒன்றை திறப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்,
(1)  (2)  (3) 

(59) "மின்னலினால் விபத்து ஏற்படுகின்றது" என்பதற்கு பயன்படுத்தப்படும் குறியீடு,
(1)  (2)  (3) 

(60) "எனது வீட்டுத்தோட்டம் மிகவும் அழகானது." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(1) .....

(2) .....

(3) .....

www.ikedu.lk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-12


வினாத்தாள் - I

சுட்டெண்:- .....

நேரம் :- 1 மணித்தியாலம்


- பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
  - உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.


* கீழே இலக்கம் (01), (02) ஆகிய வினாக்களில் மூன்று கூட்டங்களுக்கு உரிய உருக்களைக் கொண்ட கூட்டைத் தெரிவு செய்க.


(01) (1) 

(2) 

(3) 

(02) (1) 


(2) 


(3) 


(03) மெழுகுவர்த்தியில் எப்பொழுதும் இருப்பது,

(1) மெழுகு (2) நெருப்பு (3) ஒளி


(04) உச்சிகளின் எண்ணிக்கையும் முகங்களின் எண்ணிக்கையும் சமனற்ற திண்மத்தை தெரிவு செய்க.

(1) 


(2) 

(3) 


(05)



உரு 1



உரு 2




உரு 3

மேலேயுள்ள உருக்களை ஒன்றன் மீது ஒன்று வைத்தால் உருவாக்கக்கூடிய உருவிலுள்ள வெற்றுக்கூடுகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 3 (3) 2

(06)



இவ்வுருவில் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுவட்டத்திற்குப் பொருத்தமான எண்,

(1) 9 (2) 7 (3) 5

(07) ரவியும் பாலாவும் உயரமானவர்கள். கதிரும் பாலாவும் குண்டானவர்கள். ரவியும் நாதனும் இளைஞர்கள். ஏனையோர் வயோதிபர்கள். அதன்படி, வயோதிப, உயரமான, குண்டான நபர்,

(1) ரவி (2) பாலா (3) கதிர்

(08) A கடிகாரத்தின் நேரம் எப்பொழுதும் சரியான நேரத்தை விட 8 நிமிடங்கள் குறைவாகக் காட்டும். B கடிகாரத்தின் நேரம் எப்பொழுதும் A கடிகாரத்தின் நேரத்தை விட 4 நிமிடங்கள் கூடுதலாகக் காட்டும். C கடிகாரத்தின் நேரம் எப்பொழுதும் B கடிகாரத்தின் நேரத்தை விட 6 நிமிடங்கள் கூடுதலாகக் காட்டும். அதன்படி, இந்த மூன்று கடிகாரங்களிலும் மிகச் சரியான நேரத்தைக் காட்டுவது,

(1) A கடிகாரத்தின் நேரம் (2) B கடிகாரத்தின் நேரம் (3) C கடிகாரத்தின் நேரம்

(09)  இவ்வுருவின் பெறுமதி 60 எனின்,  இவ்வுருவின் பெறுமதி,

(1) 90 (2) 70 (3) 100

www.ikedu.lk

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium


தமிழ்/ English

76667-4945




தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkedu.lk

(10) 

இக்கடதாசியைப் புள்ளிக்கோட்டின் வழியே இரண்டாக மடித்த பின் காணக்கூடிய முறை,

(1) 
(2) 
(3) 

(11) வித்தியாசமான உருவைத் தெரிவு செய்க.

(1) 
(2) 
(3) 

(12) ஒரு பிள்ளை தனது வீட்டிலிருந்து வைத்தியசாலைக்குச் செல்லும்போது கடந்து சென்ற இடங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பாடசாலையை கடந்தது பேருந்து தரிப்பிடத்தை கடப்பதற்கு முன்னராகும்.

நீதிமன்றத்தை கடந்தது பேருந்து தரிப்பிடத்தை கடந்த பின்னராகும்.

பாடசாலையை கடப்பதற்கு முன்னர் வங்கியை கடந்தது.

அதன்படி, அப்பிள்ளை வீட்டிலிருந்து வைத்தியசாலைக்கு பயணிக்கும்போது சந்தித்த இடங்களை ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடை,

(1) பாடசாலை - வங்கி - நீதிமன்றம் - பேருந்து தரிப்பிடம் (2) பேருந்து தரிப்பிடம் - பாடசாலை - வங்கி - நீதிமன்றம்

(3) வங்கி - பாடசாலை - பேருந்து தரிப்பிடம் - நீதிமன்றம்

*** கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையை வாசியுங்கள். இதனைக் கொண்டு (13), (14) ஆகிய வினாக்களுக்கு உரிய விடைகளைத் தெரிவு செய்க.**

B	7	A	4	7	R	5	R	4	B	4	R	7	5	5

(13) இங்கு மிகக் குறைவாகக் காணப்படுவது,

(1) இலக்கம் 4 (2) எழுத்து A (3) இலக்கம் 7

(14) இங்கு ஒரு இலக்கத்திற்கு முன்னும் பின்னும் ஒரே வகை எழுத்து காணப்படுகிறது. அந்த எழுத்து,

(1) எழுத்து R (2) எழுத்து B (3) எழுத்து A

(15) பின்வரும் கடதாசிக் கீலத்தைப் பாருங்கள்.



இக்கடதாசிக் கீலத்தைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்தால் கிடைக்கும் உரு,

(1) 
(2) 
(3) 

(16) எனது சட்டைப் பையில் மூன்று வகையான 9 நாணயத் தாள்கள் இருக்கின்றன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபாய் 430.00 ஆகும். அதன்படி, எனது சட்டைப் பையில் இருக்கும் நாணயத் தாள்கள் யாவை?

(1) ரூபாய் 20.00 நாணயத் தாள்கள் நான்கு, ரூபாய் 50.00 நாணயத் தாள்கள் மூன்று, ரூபாய் 100.00 நாணயத் தாள்கள் இரண்டு

(2) ரூபாய் 20.00 நாணயத் தாள்கள் மூன்று, ரூபாய் 50.00 நாணயத் தாள்கள் ஐந்து, ரூபாய் 100.00 நாணயத் தாள் ஒன்று.

(3) ரூபாய் 20.00 நாணயத் தாள்கள் ஆறு, ரூபாய் 50.00 நாணயத் தாள்கள் இரண்டு, ரூபாய் 100.00 நாணயத் தாள் ஒன்று

(17) 

செங்கற்களினால் கட்டப்பட்ட மதிலின் உரு அருகே காணப்படுகிறது. இம்மதிலை கட்டுவதற்கு தேவைப்பட்ட செங்கற்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 50 (2) 52 (3) 54

(18) ஆசிம், நஸீர் ஆகிய இருவரும் மைதானத்தில் ஒரே இடத்தில் நின்றுகொண்டிருந்தனர். ஆசிம் முதலில் அவ்விடத்திலிருந்து தெற்குத் திசை நோக்கி 25 மீற்றரும் பின்னர் தனது இடது கைப்பக்கத்திற்குத் திரும்பி 100 மீற்றரும் சென்று நின்றான். நஸீர் முதலில் மேற்குத் திசை நோக்கி 50 மீற்றரும் பின்னர் தனது இடது கைப்பக்கத்திற்குத் திரும்பி 25 மீற்றரும் சென்று நின்றான். இப்போது அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள தூரம்,

(1) 150 மீற்றர் (2) 200 மீற்றர் (3) 125 மீற்றர்

www.ikeau.lk

(19) மோகன் நின்ற வரிசையில் அவனுக்கு முன்னால் 4 ஆண் பிள்ளைகளும், 3 பெண் பிள்ளைகளும் நின்றுகொண்டிருந்தனர். அவ்வரிசையில் நின்றுகொண்டிருந்த அனைவரும் மறுபக்கத்திற்குத் திரும்பினர். அப்போது மோகனுக்கு முன்னால் 2 ஆண் பிள்ளைகளும், 5 பெண் பிள்ளைகளும் நின்றுகொண்டிருந்தனர். அதன்படி, அவ்வரிசையில் மொத்தமாக எத்தனை பேர் நின்றுகொண்டிருந்தனர்.

(1) 14 (2) 8 (3) 15

(20) 4 ஆல், 6 ஆல், 8 ஆல் வகுக்கும்போது 1 மிகுதியாக வரும் மிகச் சிறிய எண்,


(1) 13 (2) 25 (3) 28

(21) கடற்கரையில் கல்வேலி அமைத்திருப்பதற்கான பிரதான காரணமாக இருக்கக்கூடியது,


(1) மீனவர்கள் இலகுவாக மீன்பிடிப்பதற்காக. (2) சிறுவர்கள் விளையாடுவதற்காக.

(3) கடலோர அரிப்பை தடுப்பதற்காக.


(22)



உரு A



உரு B



உரு C

ஒவ்வொரு உருவினதும் பருமன் படிப்படியாக அதிகரிக்கும் ஒழுங்குமுறையைக் காட்டும் விடை,

(1) உரு A - உரு C - உரு B (2) உரு B - உரு A - உரு C (3) உரு C - உரு B - உரு A

(23) கொடுக்கப்பட்டுள்ள ஐந்து சந்தர்ப்பங்களினதும் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஒழுங்காக கொடுக்கப்பட்டுள்ள விடையை தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) செடி, காய், விதை, மாவு, பாண் (2) செடி, காய், மாவு, விதை, பாண் (3) காய், விதை, பாண், மாவு, செடி

(24) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் அடிக்கோடிடப்பட்ட சொற்களுக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய சொற் கூட்டத்தை தெரிவு செய்க.

குமாரின் எதிர்காலம் அவனின் ஆற்றலில் தங்கியுள்ளது.

(1) அடுத்த வருடம், கல்வியில் (2) இளமைகாலம், பணத்தில் (3) வருங்காலம், திறனில்

(25) கீழே தரப்பட்டுள்ள கூற்று பிழையானதற்கான காரணத்தைக் குறிக்கும் விடையை தெரிவு செய்க.

நத்தை சென்ற வழியில் அதன் பாத அச்சு பதிந்திருந்தது.


(1) நத்தையின் பாத அச்சு விரைவாக மறைந்து விடும். (2) நத்தைக்கு பாதங்கள் இல்லை.

(3) நத்தை ஒவ்வொரு இடமாக செல்ல மாட்டாது.

(26) நீலா கணிதப் பாடத்தை தவிர ஏனைய பாடங்களில் கெட்டிக்காரி. சியானா கணிதம், சுற்றாடல் ஆகிய பாடங்களைத் தவிர ஏனைய பாடங்களில் கெட்டிக்காரி. பரானா சுற்றாடல், ஆங்கிலம் தவிர ஏனைய பாடங்களில் கெட்டிக்காரி. அதன்படி, நீலா, சியானா, பரானா ஆகியோரில் கணிதப் பாடத்தில் கெட்டிக்காரி,

(1) நீலா (2) சியானா (3) பரானா

(27)





அருகில் தரப்பட்டுள்ள படங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் மூன்றினைக் கொண்ட விடை,

(1) நிலம் - நீர் - சுற்றாடல் (2) நீந்தும் - பாயும் - பறக்கும்

(3) மெதுவாக - இரவு - சத்தம்

(28) "வாசிப்பு மனிதனை பூரண மனிதனாக்கின்றது" என்னும் வாக்கியத்தில் இருந்து தெரிந்துக்கொள்வது,

(1) வாசிப்பதால் மனித உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கலாம் என்பதாகும்.

(2) வாசிப்பதன் மூலம் ஒருவனின் அறிவு வளர்ச்சியடைகிறது என்பதாகும்.

(3) வாசிப்பதன் மூலம் பரீட்சைகளில் இலகுவாக சித்தியடையலாம் என்பதாகும்.

*** பின்வரும் A, B, C ஆகிய அடைப்புகளுள் சில மாகாணங்கள், சில மாவட்டங்கள், சில திசைகளின் பெயர்கள் காணப்படுகின்றன. அதற்கேற்ப (29), (30) ஆகிய வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**

A	B	C
தென்கிழக்கு	மன்னார்	வடமத்திய
வவுனியா	சப்ரகமுவ	புத்தளம்
அம்பாறை	கண்டி	வடகிழக்கு
பதுளை	ஊவா	மத்திய
வடமேற்கு	கொழும்பு	தென்மேற்கு

(29) இரண்டு திசைகள் வீதம் உள்ள இரு அடைப்புக்கள்,



(1) A, B (2) B, C (3) A, C

(30) இரண்டு மாகாணங்கள் வீதம் உள்ள இரு அடைப்புக்கள்,


(1) B, C (2) A, B (3) A, C

www.ikeduk

* **கீழே (31) மற்றும் (32) வினாக்களுக்கான 5 உருக்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் இரு உருக்கள் மற்றைய உருக்களுடன் பொருந்தவில்லை. பொருந்தாத இரு உருக்களையும் தெரிவு செய்க.**

(31) A  B  C  D  E 

(1) A, C (2) B, D (3) C, E


(32) A  B  C  D  E 

(1) B, D (2) C, D (3) A, E



(33) நீங்கள் இரவு நித்திரைக்குச் செல்ல முன்னர் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார பழக்க வழக்கமாக அமைவது,

(1) பாடங்களை படிக்க வேண்டும். (2) பற்களை துலக்க வேண்டும்.

(3) வீட்டிலுள்ள கதவுகள் மற்றும் ஜன்னல்கள் நன்றாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

(34) 

அருகில் தரப்பட்டுள்ள உருவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(35) 

ஒரு தவளை P யிலிருந்து 15cm வீதம் முன்னோக்கி பாய்கின்றது. அதுப் பாய்ந்த இடங்கள் ஆங்கில எழுத்துக்களில் காட்டுகின்றன. வெட்டுக்கிளியொன்று P யிலிருந்து 10cm வீதம் தவளை பாய்ந்த வழியாக முன்னோக்கி பாய்கின்றது. வெட்டுக்கிளியும் தவளையும் பாய்ந்த இடங்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள்,

(1) R, T (2) Q, S (3) S, U

(36) ஒரு கூடையில் 4 இதழ் பூக்களும் 5 இதழ் பூக்களும் எல்லாமாக 9 பூக்கள் இருந்தன. அவற்றின் இதழ்களின் மொத்த எண்ணிக்கை 42 ஆகும். அதன்படி, அக்கூடையிலுள்ள 4 இதழ் பூக்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 3

(37) TEEN என்னும் ஆங்கிலச் சொல்லை உருவாக்க 13 தீக்குச்சிகள் தேவை. TEAM என்ற சொல்லை உருவாக்க 13 தீக்குச்சிகள் தேவை. NEAT என்ற சொல்லை உருவாக்க எத்தனை தீக்குச்சிகள் தேவை?

(1) 11 (2) 12 (3) 10

(38) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

கோடி கோடி பணத்தினால்
மாடி வீடு கட்டுவர்;
..... மனஎனினால்
வீடு நாங்கள் கட்டினோம்.

இப்பாடலில் தரப்பட்டுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்,

(1) கோடி கோடி (2) குவியலான (3) பென்னம்பெரிய

(39) மழை முகிலுக்கும் சாதாரண முகிலுக்கும் இடையே உள்ள பிரதான வித்தியாசம்,

(1) வடிவம் (2) இருக்கும் இடம் (3) நிறம்

(40) பாடசாலை கல்விச் சுற்றுலாவில் 40 பிள்ளைகள் கலந்துக் கொண்டனர். அவர்களில் 12 ஆண் பிள்ளைகளும் 8 பெண் பிள்ளைகளும் பகல் உணவிற்காக சோறு கொண்டு வந்தார்கள். 7 பிள்ளைகள் பாண் கொண்டு வந்ததுடன் ஏனையோர் இடியப்பம் கொண்டு வந்தார்கள். அதன்படி, இடியப்பம் கொண்டு வந்த பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை,

(1) 15 (2) 13 (3) 12

www.ikedu.lk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022
தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-12
வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
*** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
*** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே செம்மஞ்சள் நிறப்பந்துப்போல மெதுவாக மேலெழுகின்றான். கதிரவனைக் கண்ட நிலவு மகள் நாணத்துடன் ஒளிந்து கொள்கிறாள். நீலவானைச் செந்நிறமாக்கிய கதிரவனின் பொற்கரம் பட்டதும் இலைகளின் நடுவே இரத்தினக் கற்களாக மின்னிய பனித்துளிகள் மெல்லமெல்ல மறையத் தொடங்கின.

(i) கிழக்கு வானில் செம்மஞ்சள் நிறப்பந்துப்போல மேலெழுந்தது எது? .....

(ii) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள பெயர் அடைமொழிச் சொல்லை எழுதுக. .....

(iii) "செம்மஞ்சள்" என்பதை பிரித்தெழுதுக. .....

(iv) "விரைவாக" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக. .....

(v) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள அடுக்குமொழிச் சொல்லை எழுதுக. .....

(02) பின்வரும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள சொற்களாக எழுதுக.

(i) ந் / ப் / வ / து / லை / ப :- ..... (ii) ளி / த / த் / டு / கி / ட் :- .....

(03) வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்களினுள்ளேயிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) சந்தையில் சனக்கூட்டம் ..... (நிறைந்திருந்தது . நிறைந்திருந்தனர்)

(ii) ஆசிரியர் ஒவ்வொரு ..... (பிள்ளைகளுக்கும் , பிள்ளைக்கும்) புத்தகத்தை பகிர்ந்தளித்தார்.

(iii) அவை குஞ்சுகளுக்கு உணவு ..... (ஊட்டுகின்றன , ஊட்டுகிறது)

(04) கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள்ளிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
(நாம் , பந்துகள் , ஆசிரியர்கள் , புத்தகம் , விவசாயி , நான்)

(i) அ.றிணை ஒருமைப் படர்க்கைப் பெயர்ச்சொல் :- .....

(ii) உயர்திணை பன்மைப் படர்க்கைப் பெயர்ச்சொல் :- .....

(iii) தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் :- .....

(05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(i) ஐயோ கடிகாரம் கீழே விழுந்ததா (ii) நண்பனே ஆற்றில் குளிக்க வேண்டாம்

(06) கீழே தரப்பட்டுள்ள பழமொழிக்குப் பொருத்தமான கருத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

உண்ணாச் சொத்து மண்ணாய் போகும். :- .....

(07) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.
வேர்களில் / பயிர்கள் / வைக்கின்றன / சில / சேர்த்து / உணவை

.....

(08) கீழே தரப்பட்டுள்ள மரபுத் தொடரின் கருத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

கண்ணும் கருத்துமாய் இருத்தல் :- .....

(09) கீழே தரப்பட்டுள்ள எதிர்கால வாக்கியத்தை இறந்தகால வாக்கியமாக மாற்றி எழுதுக.

நான் அம்மாவுடன் பாடசாலைக்குச் செல்வேன். :- .....

(10) பின்வரும் சொற்தொகுதிகள் ஒவ்வொன்றிலும் சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) மகிழ்ன்தோம் , மகிழ்ந்தோம் , மகில்ந்தோம் (ii) நூதனசாலை , நூதணசாலை , நூதனசாளை

www.kedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

(11) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) I am ..... (going / go) out. (ii) Where ..... (is / are) the books.

(12) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) கத்தி :- ..... (ii) கடிதம் :- .....

(13) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Where are they? :- ..... (ii) Get ready :- .....

(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

அ(த்)துலட்ட என்ன :- .....

(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

எத்தனை மாம்பழம் வேண்டும்? :- .....


(16) ஒரு செங்கற் குவியலில் 13990 செங்கற்கள் உள்ளன. அதற்கு மேலும் 10 செங்கற்களை சேர்த்தால் செங்கற் குவியலில் உள்ள மொத்த செங்கற்களின் எண்ணிக்கை யாது? .....

(17) பி.ப 3.00 மணிக்கு புறப்படக் குறிக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று 30 நிமிடங்களுக்குப் பின்னர் பயணத்தை தொடங்கியது. அப்பயணத்திற்கு 2 மணித்தியாலங்கள் 15 நிமிடங்கள் எடுத்தது. பேருந்து பயணத்தைப் பூர்த்தி செய்த நேரம் எவ்வளவு?.....

(18) 235 புத்தகங்களை ஒருவருக்கு 4 வீதம் எத்தனை பேருக்குப் பகிர்ந்து கொடுக்கலாம்? .....


மீதி எவ்வளவு? .....

(19) ஒரு குறித்த தொழிற்சாலையில் ஒவ்வொரு வகையிலும் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை கீழே வரைபில் காட்டப்பட்டுள்ளது.



(i) தொழிற்சாலையிலுள்ள மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை, அங்குள்ள பேருந்துகளின் எண்ணிக்கையினதும் கார்களின் எண்ணிக்கையினதும் கூட்டுத்தொகைக்குச் சமம். வரைபின் உரிய நிரலில் மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கையைக் குறித்து அந்நிரலை நிழற்றுக.

(ii) தொழிற்சாலையிலுள்ள முச்சக்கரவண்டிகள் மற்றும் பேருந்துகள் என்பவற்றின் எண்ணிக்கைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது? .....

(20) 


காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் ஐந்தினையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப் பெரிய எண் யாது? .....

(21) ரூபாய் 37.00 விலையுள்ள ஒரு பேனையையும் ரூபாய் 58.00 விலையுள்ள ஒரு பயிற்சி புத்தகத்தையும் வாங்குவதற்கு என்னிடம் ரூபாய் 67.00 உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்? .....

(22) 0.6 , $\frac{3}{10}$, 0.9 , $\frac{1}{10}$, 0.5 இவ்வெண்களில்,

(i) மிகச் சிறிய எண்ணைத் தெரிவுசெய்து எழுதுக. ..... (ii) மிகப் பெரிய எண்ணைத் தெரிவுசெய்து எழுதுக. .....

(23) 450 பென்சில்களில் 60 மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லாப் பென்சில்களையும் ஒரு பெட்டியில் 6 வீதம் இருக்குமாறு சிறிய பெட்டிகளில் இட்டப்பட்டன. அதன்படி, பென்சில்கள் இடப்பட்ட சிறிய பெட்டிகளின் எண்ணிக்கை யாது? .....

(24)  இவ்வுருவில் $\frac{1}{4}$ ஐ நிழற்றிக் காட்டுக.


(25) 4, 6, 2, 8 என்னும் எண்களைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக. (ஒரே எண்ணைப் பல தடவைகள் பயன்படுத்தலாம்.)

(i) 7 + ... + ... = 19 (ii) 27 - ..... - ..... = 19

(26) எண் கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் முறையே எழுதுக.

3700 , 3500 , 3300 , 3100 , ... , ...


www.ikeda.lk

(27) 


A, B, C, D, E ஆகிய ஐந்து இடங்களும் அமைந்துள்ள முறை இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கான சரியான விடைகளை எழுதுக.

(i) குமார் C யிலிருந்து 400m தென்மேற்குத் திசைக்குச் சென்று, அங்கிருந்து 280m வடக்குத் திசைக்குச் சென்று நின்றான். அதன்படி, அவன் தற்போது இருக்கும் இடத்தின் ஆங்கில எழுத்தை எழுதுக. .....

(ii) கதிர் A யிலிருந்து 200m தென்கிழக்குத் திசைக்குச் சென்று, அங்கிருந்து 280m மேற்குத் திசைக்குச் சென்று, அங்கிருந்து 200m வடகிழக்குத் திசைக்குச் சென்று நின்றான். அதன்படி, அவன் தற்போது இருக்கும் இடத்தின் ஆங்கில எழுத்தை எழுதுக. .....

(28) 

இந்த உருவிற்கு எத்தனை சமச்சீர்க் கோடுகளை வரையலாம்? .....

(29) 

இப்பூச்சாடியிலிருக்கும் பூக்களில் உள்ள இதழ்களின் மொத்த எண்ணிக்கையை உரோம எண்குறிகளில் எழுதுக. .....

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) தண்டில் காய்க்கும் தாவரங்கள்,
(1) பலா, விளிம்பி (2) எலுமிச்சை, கொய்யா (3) லொவி, மங்குஸ்தான்

(31) இரவு வேளையில் நடமாடும் பிராணிகள் அல்லாதது,
(1) மின்மினிப்பூச்சி, நுளம்பு (2) வெளவால், ஆந்தை (3) கானாங்கோழி, மரங்கொத்தி

(32) எமது நாட்டிற்கே மட்டும் உரித்தான முலையூட்டிகள்,
(1) புளுணி, கானாங்கோழி (2) கருங்குரங்கு, மரஅணில் (3) கங்காரு, வெளவால்

(33) பெரும்பாலும் மரமஞ்சளை வேகவைத்து குடிப்பது,
(1) பாதத்தில் துருப்பிடித்த ஆணி குத்தினால் (2) பாம்புக் கடித்தபோது (3) தேனீ தாக்கியபோது

(34) பழச் செய்கைக்கு பெரும்பாலும் தீங்கு விளைவிக்கும் பிராணி,
(1) தேனீ (2) மயிர்கொட்டி (3) வெண்மூட்டுப்பூச்சி

(35) களனி கங்கை, களு கங்கை ஆகியன கடலுடன் கலப்பது,
(1) தென் மாகாணத்தில் (2) மேல் மாகாணத்தில் (3) கிழக்கு மாகாணத்தில்

(36) சீதேவியார் செங்கழுநீர், மரமுந்திரிகை, இறப்பர் என்னும் வித்து வகைகளை பரப்பும் முறைகளை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,
(1) காற்றின் மூலம், விலங்குகளின் மூலம், வெடித்தல் மூலம்.
(2) வெடித்தல் மூலம், நீரின் மூலம், காற்றின் மூலம். (3) விலங்குகளின் மூலம், வெடித்தல் மூலம், நீரின் மூலம்.

(37) ஒலிம்பிக் கொடியில் காணப்படும் ஐந்து வளையங்களும் எதனைக் குறிக்கின்றன?
(1) நாடுகள் (2) விளையாட்டுக்கள் (3) கண்டங்கள்

(38) எல்லே விளையாட்டில் ஒரு குழுவில் இருக்க வேண்டிய வீரர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை,
(1) 10 (2) 16 (3) 19

(39) "மஞ்சட்காமாலை" நோய் ஏற்படுவதற்கான பிரதான காரணம்,
(1) அசுத்தமான நீரைக் குடிப்பதன் மூலம். (2) சீனி அதிகம் உள்ள உணவுகளை அடிக்கடி உண்பதன் மூலம்.
(3) நுளம்புகள் கடிப்பதன் மூலம்.

(40) பயிர்ச்செய்கையில் விவசாயிகளுக்கு உதவும் பிராணி அல்லாதது,
(1) தேனீ (2) மண்புழு (3) தும்பி

(41) "நீரிழிவு" நோயாளர்கள் அடிக்கடி உட்கொள்ளக்கூடாத உணவுகள்,
(1) கீரை வகை, மரக்கறி வகை (2) மரவள்ளி, பாண் (3) மீன் , பருப்பு

(42) "தேங்காய்ப்பூக்கீரை" காட்டப்பட்டுள்ள உருவைத் தெரிவு செய்க,
(1) 
(2) 
(3) 

www.ikedu.lk

(43) பழங்களை செயற்கையாக பழுக்கச் செய்வதற்கு பயன்படுத்தும் பொருள்,

(1) யூரியா (2) காபைட் (3) உப்புக்கரைசல்

(44) வடமத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய மாகாணங்களுக்குரிய மாவட்டங்களை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,

(1) வவுனியா, அம்பாந்தோட்டை (2) பதுளை, யாழ்ப்பாணம் (3) அநுராதபுரம், மட்டக்களப்பு

(45) ஆதர் சீ. கிளாக் அவர்கள் பிறந்தது,

(1) இங்கிலாந்தில் (2) இலங்கையில் (3) இந்தியாவில்

(46) செதில்களால் உடல் மூடப்பட்ட பிராணிகளாவன,

(1) ஆமை, நத்தை (2) பல்லி, வௌவால் (3) மீன், பாம்பு

(47) 

இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள விளையாட்டு,

(1) போர்த்தேங்காய் (2) கபடி (3) கயிறு இழுத்தல்

(48) கிராம அதிகாரியால் வழங்கப்படும் சேவை அல்லாதது,

(1) தேசிய அடையாள அட்டைக்காகத் தகவல்களை வழங்குதல்.

(2) இயற்கை அனர்த்தங்களின்போது நிவாரண சேவைகளை வழங்குதல்.

(3) பயிர்ச்செய்கை தொடர்பான ஆலோசனை வழங்குதல்.

(49) எதிரியைக் கண்டால் உடலை ஓட்டினுள் இழுத்துக் கொண்டு அசையாது இருக்கும் பிராணி,

(1) ஆமை (2) மரவட்டை (3) ஆமடில்லோ

(50) ஆணிவேரிலிருந்து பக்கவேர்கள் தோன்றியுள்ள தாவரம்,

(1) ரம்பை (2) குப்பைமேனி (3) லீக்ஸ்

(51) சந்திரன் பூமியைச் சுற்றிவருவதற்கு எடுக்கும் காலம்,

(1) 28 நாட்கள் (2) 24 மணித்தியாலங்கள் (3) 1 வருடம்

(52) "எனது உள்ளத்தின் அமைதியை எனது நண்பர்களும் உணரட்டும், எனது வீட்டாரும் உணரட்டும், எனது பாடசாலையினரும் உணரட்டும்." என்ற எண்ணம் தியானச் செயற்பாட்டின் எந்தப் படிநிலையில் தோன்றும்,

(1) மனவுறுதி (2) மலர்வு (3) பிரார்த்தனை

(53) பலாப்பழத்தை வெட்டும்போது கைகளில் பூசும் பதார்த்தம்,

(1) எலுமிச்சை சாறு (2) தேங்காயெண்ணெய் (3) மண்ணெண்ணெய்

(54) கொம்புகளால் எதிரிகளை தாக்கும் விலங்குகள்,

(1) மாடு, மான் (2) கரடி, புலி (3) முதலை, நரி

(55) தூங்கும்போது கண்களை திறந்த நிலையில் தூங்கும் பிராணி,

(1) பூனை (2) மீன் (3) ஆடு

(56) பூரணமாக நீரில் அமிழ்ந்து வாழும் தாவரம்,

(1) ஐதரில்லா (2) தாமரை (3) ஆகாயத்தாமரை

(57) மைதானத்தின் நடுவில் பொருத்தப்படும் வலையின் இருபக்கங்களிலும் இருந்து விளையாடப்படும் விளையாட்டு,

(1) வலைப்பந்து (2) கூடைப்பந்து (3) பூப்பந்து

(58) மின்மணியொன்றை செய்யத் தேவைப்படுவது,

(1) சட்டக்காந்தம் (2) மின்காந்தம் (3) தைனமோ

(59) ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெறுவது,

(1) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை (2) ஆறு வருடங்களுக்கு ஒரு முறை (3) நான்கு வருடங்களுக்கு ஒரு முறை

(60) "முழு உலகிற்கும் ஒளியைக் கொடுக்கும் சூரியன் நானாவேன்." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(1) .....

(2) .....

(3) .....

www.ikedu.lk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான


முன்னோடிப் பரீட்சை - இல-13

வினாத்தாள் - I

சுட்டெண்:- .....

நேரம் :- 1 மணித்தியாலம்

- பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
  * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

(01) 


இவ்வுருவில் மூன்று வடிவங்களுக்கும் பொதுவான எண்,

(1) 5 (2) 3 (3) 9

(02) 

இக்கடிகார முகத்தின் முட்களுக்கிடையிலான கோணம் செங்கோணமாக அமைவதற்கு எடுக்கும் மிகக் குறைந்த நேரம்,

(1) 25 நிமிடங்கள் (2) 35 நிமிடங்கள் (3) 20 நிமிடங்கள்

(03) 

சித்ரா P யிலிருந்து M ஊடாக T வரை பயணித்தாள். சியானா R யிலிருந்து S ஊடாக T வரை பயணித்தாள். அதன்படி, இருவரும் பயணித்த மொத்தத் தூரம்,


(1) 80m (2) 18m (3) 26m

(04) 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். அதன்படி, அம்மாதத்திலுள்ள வெள்ளிக்கிழமைகளின் எண்ணிக்கை,

(1) 5 (2) 4 (3) 6

(05) "நான் நேற்று முன்தினம் வீட்டிற்கு வந்தேன்." என தம்பி நேற்று முன்தினம் கூறினான். இன்று திங்கட்கிழமை எனின், தம்பி வீட்டிற்கு வந்த கிழமை,

(1) புதன்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) வியாழக்கிழமை

(06) 

இக்கார்ட்போர்ட் அட்டையிலிருந்து வெட்டி எடுக்கக்கூடிய நிழற்றப்பட்ட முறையிலான சதுர வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 8 (2) 9 (3) 7


(07) 

சமனான நிறையுடைய மூன்று மாம்பழங்களும், சமனான நிறையுடைய மூன்று தோடம்பழங்களும், சமனான நிறையுடைய இரண்டு பப்பாசிப்பழங்களும் ஒரு தராசின் மீது வைக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. இத்தராசு சமநிலையுடையது. அதன்படி, ஒரேயளவான நிறையுடைய இரண்டு பழங்கள்,

(1) தோடம்பழம் மற்றும் மாம்பழம் (2) மாம்பழம் மற்றும் பப்பாசிப்பழம் (3) தோடம்பழம் மற்றும் பப்பாசிப்பழம்


(08) முதலில் தரப்பட்டுள்ள உருவுடன் மிகக் குறைந்த தொடர்பினைக் கொண்ட உருவைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

(09) 

இவ்வுருவில் காணக்கிடைக்கும் முக்கோணங்களின் எண்ணிக்கை,

(1) 9

(2) 5

(3) 8

www.ikeou.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium


தமிழ்/ English

76667-4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

(10) தாயக்கட்டை ஒன்றின் முகங்கள் ஒரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ள முறை 1, 2, 3 ஆகிய உருக்களினால் காட்டப்பட்டுள்ளது. அக்கோலத்தை அவதானித்து அடுத்துவரும் உருவைத் தெரிவு செய்க.



(11) தொடக்கத்திலுள்ள உருக்களைத் தொடர்புபடுத்தும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.




(12)



நசீர் A வட்டத்திலும் அமீன் M வட்டத்திலும் நின்றுகொண்டிருந்தனர். உருவில் காட்டப்பட்டுள்ளபடி, நசீர் ஒரு வட்டம் முன்னோக்கிப் பாயும்போது அமீன் இரண்டு வட்டங்கள் முன்னோக்கிப் பாய்ந்தான். இருவரும் ஒரே நேரத்தில் பாய ஆரம்பித்தனர். எனின், இருவரும் சந்திப்பது,

(1) E வட்டத்தின் மீது (2) F வட்டத்தின் மீது (3) G வட்டத்தின் மீது


(13)



P எனும் நகரத்திலிருந்து A, B, C, D ஆகிய நகரங்களுக்கான தூரங்கள் இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளன. சிவகுமார் A நகரத்திலிருந்து P நகரத்தினூடாக C நகரம் வரை பயணித்து, மீண்டும் P நகரத்தினூடாக B நகரம் வரை பயணித்தான். அதன்படி, அவன் பயணித்த மொத்தத் தூரம்,

(1) 37km (2) 45km (3) 47km


(14)



ஒரேயளவான சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் அமைக்கப்பட்ட பெரிய திண்மமொன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. அதில் இருக்கக்கூடிய குறைந்தபட்ச சிறிய சதுரமுகிகளின் மொத்த எண்ணிக்கை,

(1) 14 (2) 16 (3) 18

(15)



A பாத்திரம் முழுமையாக நிரம்புவதற்கு பாத்திரம் B யினால் மூன்று தடவைகள் நீர் ஊற்ற வேண்டும். பாத்திரம் A முழுமையாக நிரம்புவதற்கு பாத்திரம் C யினால் 12 தடவைகள் நீர் ஊற்ற வேண்டும். அதன்படி, பாத்திரம் B முழுமையாக நிரம்புவதற்கு பாத்திரம் C யினால் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?

(1) 5 தடவைகள் (2) 6 தடவைகள் (3) 4 தடவைகள்

(16) பின்வரும் மூன்று உருக்களுள் பொருத்தமற்ற உரு,

(1)




(2)



(3)



(17)




உருவின்படி, ஒரு நிறத்தை மட்டும் விரும்பும் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை,

(1) 8
(2) 6
(3) 5

(18) 36cm நீளமுள்ள கம்பித்துண்டினால் செய்யக்கூடிய சதுரமுகியின் ஒரு பக்க நீளம்,

(1) 3cm (2) 6cm (3) 8cm


(19)



இவ்வுருவில் காணப்படும் ஒவ்வொரு வடிவத்தின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடை,

(1) சதுரங்கள் - செவ்வகங்கள் - முக்கோணங்கள்
(2) முக்கோணங்கள் - சதுரங்கள் - செவ்வகங்கள்
(3) செவ்வகங்கள் - சதுரங்கள் - முக்கோணங்கள்

www.ikeduc.lk

(20) 

இவ்வுருளை புள்ளிக்கோடுகளின் வழியே சிறிய துண்டுகளாக வெட்டப்பட்டது. அதன்படி, கிடைக்கும் சிறிய கனவுருக்களின் எண்ணிக்கை,

(1) 18 (2) 2 (3) 8


(21) பின்வரும் தகவல்களை நன்கு பரிசீலிக்குக.

2 தோடம்பழங்கள் + 3 மாம்பழங்கள் → **ரூபாய் 120.00**

2 தோடம்பழங்கள் + 5 மாம்பழங்கள் → **ரூபாய் 160.00**


மேலேயுள்ள தகவல்களின்படி, மாம்பழமொன்றின் விலை,

(1) ரூபாய் 20.00 (2) ரூபாய் 10.00 (3) ரூபாய் 30.00

(22) 

இம்முறையிலான கனவுருக்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் பிள்ளையொன்று சதுரமுகியை அமைத்தது. அதன்படி, அப்பிள்ளைக்கு தேவைப்பட்ட கனவுருக்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை,


(1) 27 (2) 12 (3) 18

(23) 

உரு A உரு B

உரு A யினால் காட்டப்படும் முக்கோண வடிவக் கார்ட்போர்ட் அட்டை புள்ளிக்கோடுகளின் வழியே 5 துண்டுகளாக வெட்டப்பட்டன. அதன்பின் அவற்றுள் 3 துண்டுகளைப் பயன்படுத்தி உரு B அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, உரு B ஐ அமைப்பதற்குப் பயன்படுத்திய கார்ட்போர்ட் துண்டுகளின் இலக்கங்கள்,


(1) 5, 3, 2 (2) 1, 4, 3 (3) 4, 5, 2


(24) 


A, B, C ஆகிய உருக்களினால் காட்டப்பட்டுள்ள கற்தூண்கள், D உருவினால் காட்டப்பட்டுள்ள முறையிலான கற்களினால் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி, A, B, C ஆகிய உருக்களினால் காட்டப்பட்டுள்ள கற்தூண்களை அமைப்பதற்கு தேவைப்பட்ட D உருவினால் காட்டப்பட்டுள்ள முறையிலான கற்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 96 (2) 88 (3) 90

(25) கீழே காட்டப்பட்டுள்ள 3 பாத்திரங்களும் நீரினால் நிரப்பப்பட்டுள்ளது. அப்பாத்திரங்களிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்வதற்காக நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதன்படி, நீரைப் பெற்றுக்கொள்வதற்கு மிகச் சரியான முறையில் நீர்க்குழாய் பொருத்தப்பட்டுள்ள பாத்திரத்தைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

(26) பெட்டியொன்றினுள் பச்சை, மஞ்சள், சிவப்பு நிறப் பந்துகள் 4 வீதம் உள்ளன. முதல் தடவையாக மஞ்சள் நிறப் பந்தை வெளியே எடுப்பதற்கு ஒரே தடவையில் எடுக்க வேண்டிய மிகக் குறைந்த பந்துகளின் எண்ணிக்கை,

(1) 8 (2) 9 (3) 4

(27) ஒரு கடிகாரத்தில் மணித்தியால முள்ளிற்கும் நிமிட முள்ளிற்கும் இடையேயுள்ள கோணம் செங்கோணத்திற்கு மிக நெருங்கிய கோணத்தைக் காட்டும் நேரம்,

(1) 3 கடந்து 5 நிமிடங்கள் (2) 8 கடந்து 50 நிமிடங்கள் (3) 6 கடந்து 30 நிமிடங்கள்

(28) அடுத்தடுத்து வரும் இரு மாதங்களின் நாட்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ள முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

8 , 15 , 22 , 29 , 5 , 12

அதன்படி, அவ்விரண்டு மாதங்களாக இருக்கக்கூடியது,


(1) ஏப்ரல் - மே (2) பெப்ரவரி - மார்ச் (3) ஜூலை - ஆகஸ்ட்

(29) பிள்ளையொன்று P எனும் இடத்திலிருந்து 20m வீதம் வடமேற்கு, தென்மேற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு ஆகிய திசைகளுக்குச் சென்று நின்றது. அதன்படி, அப்பிள்ளை தற்போது நிற்பது,

(1) P எனும் இடத்தில் (2) P எனும் இடத்திலிருந்து 20m தூரத்தில்


(3) P எனும் இடத்திலிருந்து 40m தூரத்தில்

www.ikeduk

(30) 

இவ்வுருவில் ஒரேயளவான ஐந்து சிறிய செவ்வக வடிவமான கார்ட்போர்ட் அட்டைகள் காட்டப்பட்டுள்ளன. சிறிய செவ்வக வடிவமான கார்ட்போர்ட் அட்டையொன்றின் அகலம் 6cm ஆகும். அதன்படி, சிறிய செவ்வக வடிவமான கார்ட்போர்ட் அட்டையொன்றின் நீளம்,

(1) 30 cm (2) 24 cm (3) 36 cm


(31) 

இத்தின்மத்தை எத்திசைகளிலிருந்து பார்க்கும்போது சிறிய சதுர வடிவங்கள் சமனான எண்ணிக்கை வீதம் புலப்படும்,

(1) A திசையிலிருந்து மற்றும் B திசையிலிருந்து பார்க்கும்போது
(2) C திசையிலிருந்து மற்றும் D திசையிலிருந்து பார்க்கும்போது
(3) D திசையிலிருந்து மற்றும் B திசையிலிருந்து பார்க்கும்போது

(32) "சகல மாதங்களிலும் பூரண பௌர்ணமி தினம் ஒன்று வீதம் உள்ளது". இக்கூற்று,

(1) சரியானது. (2) பிழையானது. (3) கூறமுடியாது.

(33) 

இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின்,

(1) $\frac{8}{16}$ (2) $\frac{12}{16}$ (3) $\frac{6}{16}$

(34) 

"இந்த விளக்கில் மண்ணெண்ணெய் அனைத்தும் முடிவடைந்த பின்னர் விளக்கு அணைந்துவிட்டது." இக்கூற்று,

(1) சரியானது. (2) பிழையானது. (3) கூறமுடியாது.

(35) வாகனமொன்று முன்னோக்கி பயணிக்கும்போது சக்கரங்கள் சுழலும் திசைகளை 3 பிள்ளைகள் வரைந்துள்ள முறை கீழே உருக்களினால் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, சக்கரங்கள் சுழலும் திசைகள் சரியாக வரையப்பட்டுள்ள உரு,

(1) 

(2) 

(3) 

(36) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

பாதையில் நாமும் போகையிலே
பார்த்துக் கவனமாய்ச் சென்றிடுவோம்.
வீதியொழுங்கைப் பேணி நிதம்
விபத்திலிருந்து காத்திடுவோம்.

இப்பாடலின் குறிப்பிடப்படும் பிரதான கருத்து,

(1) வீதி விபத்து
(2) வீதி ஒழுங்கு
(3) வீதிப்பராமரிப்பு


(37) **மரத்திற்கு ; ..A.. எனின் ..B.. ; உணவு**

இங்கு A, B ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான இரண்டு சொற்களைக் கொண்ட விடை,

(1) A - பூக்கள் ; B - உப்பிற்கு (2) A - நீர் ; B - வீட்டிற்கு (3) A - பசளை ; B - மனிதனுக்கு


(38) சரியான கருத்தையுடைய விடையைத் தெரிவு செய்க.

(1) சிவப்பு நிறம் மூலவர்ணங்களுள் ஒன்றாகும். இரண்டு வர்ணங்களை கலப்பதன் மூலம் சிவப்பு நிறத்தை தயாரிக்க முடியாது.
(2) நீரை குளிர்த்தும்போது பனிக்கட்டியாக மாறுதல், நீருக்கு நிலையான வடிவம் இருத்தல்.
(3) கரம் என்பது உள்ளக விளையாட்டாகும். கரம் உடற்சக்தி அதிக அளவில் விரயமாகும் விளையாட்டாகும்.

(39) 

4kg 5kg 2kg இம்மூன்று படிக்கற்களையும் உருவில் காட்டப்பட்டுள்ள தராசின் மீது ஒரே தடவையில் வைப்பதன் மூலம் நிறுத்துக்கொள்ளக்கூடிய நிறை,

(1) 8 kg (2) 6 kg (3) 3 kg

(40) 

இச்செவ்வக வடிவக் கார்ட்போர்ட் அட்டையிலிருந்து வெட்டி எடுக்கக்கூடிய நிழற்றப்பட்டுள்ள முறையிலான முக்கோண வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 8 (2) 6 (3) 5

www.ikeou.lk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-13

வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

சுத்தமே என்றும் சுகம் அளிக்கும் - தீய
சோம்பலை ஓட்டித்துரத்தும், அம்மா!
இத்தரை வாழ்வைப் பெருக்கும், அம்மா! - அதற்கு
ஈடேதும் இல்லையான் சொன்னேன், அம்மா!

கந்தையானாலும் கசக்கியுடு - என்னும்
கற்பனைபோற்றி நடப்பாய், அம்மா!
சுந்தர மேனியுண்டாகும், அம்மா! இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ? அம்மா!

- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

(i) இப்பாடலை இயற்றியவர் யார்? .....

(ii) இப்பாடல் எதைப் பற்றி குறிப்பிடுகின்றது? .....

(iii) "உற்சாகம்" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல் எது? .....

(iv) இப்பாடலில் இடம்பெற்றுள்ள பழமொழி யாது? .....

(v) இப்பாடலில் இடம்பெற்றுள்ள உயர்திணை படர்க்கைப் பெயர்ச்சொல் எது? .....

(02) பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.

(i) சவுக்காரம் :- ..... (ii) முயற்சி :- .....

(03) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுவாயை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ..... (அவை / அது) ஒரு அடர்ந்த காடு ஆகும்.

(ii) ..... (நீர் / நீங்கள்) வீட்டிற்குச் சென்று மாலையில் என்ன செய்வீர்?

(iii) ..... (குருவிகள் / குருவி) தானியங்களை தின்றது.

(04) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள அடைப்பிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(வயல் , புளிப்பு , விரல் , சந்தை , குளிர் , கிளை)

(i) குணப்பெயர்களை தெரிவுசெய்து எழுதுக. .....

(ii) சினைப்பெயர்களை தெரிவுசெய்து எழுதுக. .....

(iii) இடப்பெயர்களை தெரிவுசெய்து எழுதுக. .....

(05) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(சென்றோம் , ஒளிர்ந்தது , சென்றாய் , வருகிறார்கள் , செய்கிறீர்கள்)

(i) முன்னிலை பன்மை நிகழ்கால வினைச்சொல் :- .....

(ii) அ.றிணை படர்க்கை ஒருமை வினைச்சொல் :- .....

(iii) படர்க்கைப் பன்மை நிகழ்கால வினைச்சொல் :- .....

(06) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) கோழியின் பெண் பேடு அதுபோல யானையின் பெண் ..... (களிறு , பிடி , மறி)

(ii) குதிரையின் ஆண் குண்டு அதுபோல சிங்கத்தின் ஆண் ..... (ஏறு , கடுவன் , கலை)

(07) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் அறிவித்தலாயின் (✓) எனவும், அறிவுறுத்தலாயின் (X) எனவும், கட்டளையாயின் (0) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள்ளே அடையாளமிடுக.

(i) மேசையிலுள்ள எல்லாப் புத்தகங்களையும் இறாக்கையின் இரண்டாவது தட்டில் வைத்து வகுப்பிற்குச் செல்லுங்கள் ( )

(ii) இவ்வாக்கியத்தின் பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறியீடுகளை இடுக. ( )

(iii) இந்த ஆசனங்கள் விழாவில் கலந்துகொண்ட விருந்தினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. ( )

www.kodu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

(08) பின்வரும் ஒவ்வொரு சொல்லையும் வைத்து வாக்கியம் அமைக்குக.

(i) திரை :- ..... (ii) திறை :- .....

(09) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் தடித்த எழுத்துக்களிலுள்ள மரபுத் தொடரின் கருத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) அந்த செல்வந்தர் ஏழைக் குடும்பத்தை **கைதூக்கி விட்டார்.** .....

(ii) அதிபர் ஆவணங்களுக்கு கையொப்பமிடுவதற்கு **தட்டிக் கழித்தார்.** .....

(10) பின்வரும் பழமொழியின் மீதிப் பகுதியினைப் பூரணப்படுத்துக.

குற்றம் பார்கிற் .....

(11) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(i) Please go out :- ..... (ii) I am thirsty :- .....

(12) தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)  :- ..... (ii)  :- .....

(13) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) are / going? / Where / you :-.....

(ii) is / How / it? / much :-.....

(14) பின்வரும் ஒவ்வொரு சொல்லையும் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.


(i) உட்காருங்கள் :- ..... (ii) திங்கட்கிழமை :- .....

(15) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

கொ(க்)கா மொன பாட்டத? .....

(16) 3 பேனைகளின் விலை ரூபாய் 60.00 ஆகும். அதன்படி, 5 பேனைகளின் விலை யாது? .....

(17) பாடசாலை மு.ப. 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும். ஆனால் சீதா அதற்கு 50 நிமிடங்களுக்கு முன்னர் பாடசாலைக்குச் சென்றாள். அதன்படி, அவள் பாடசாலைக்குச் சென்ற நேரம் யாது? .....


(18)  இக்கடிகார முகத்தில் 00:45 எனும் நேரத்தை வரைந்து காட்டுக. (மணித்தியால முள், நிமிட முள் என்பவற்றைத் தெளிவாக வரைக.)

(19) (i) வட்டமொன்று 10 சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதில் 7 பகுதிகள் நிழற்றப்பட்டிருந்தன. அதன்படி, நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதுக. .....

(ii) 10000 , 1000 , 100 , 10 , ... எனும் எண் கோலத்தில் அடுத்து வரவேண்டிய எண்ணை எழுதுக.

(20) ஒரு பிள்ளை வடகிழக்குத் திசைக்கு சிறிது தூரம் பயணித்து, பின்னர் தனது இடது கைப்பக்கத்திற்குத் திரும்பிப் பயணித்தது. அதன்படி, அப்பிள்ளை தனது இடது கைப்பக்கமாகத் திரும்பிப் பயணித்த திசை யாது?

.....

(21) 

B பாத்திரத்திலுள்ள நீரின் அளவு A பாத்திரத்திலுள்ள நீரின் அளவைப்போல இரு மடங்காகும். அதன்படி, இரு பாத்திரங்களிலும் உள்ள மொத்த நீரின் அளவு யாது? .....

(22) ஒரு குறித்த கடையொன்றில் வாரத்தில் ஐந்து நாட்களில் விற்பனை செய்யப்பட்ட பாண்களின் எண்ணிக்கை கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

நாட்கள்	காலை	மாலை
திங்கள்	7	5
செவ்வாய்	4	9
புதன்	8	3
வியாழன்	6	8
வெள்ளி	4	5

இவ்வட்டவணையிலுள்ள தகவல்களின்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

(i) அதிகளவான பாண் விற்பனை செய்யப்பட்ட நாள் எது? .....

(ii) வெள்ளிக்கிழமையை விட திங்கட்கிழமையில் எத்தனை பாண்கள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டன? .....

(iii) அவ்வாரத்தில் அதிகளவு பாண் விற்பனை செய்யப்பட்டது காலையிலா? மாலையிலா? .....

(23)

IX	VI	XIV
XII	VIII XX	XVIII

இக்கட்டத்திலுள்ள எண்களில் 3 இனால் மீதியின்றி வகுப்படக்கூடிய எண்களை மட்டும் தெரிவுசெய்து பெறுமதி கூடிச்செல்லும் ஒழுங்கில் எழுதுக. .....

www.ikeou.lk

(24)  இவ்வுருவில் காணக்கிடைக்கும் செங்கோணத்தை விடக் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை யாது? .....


(25) பிள்ளையொன்று பயிற்சிக் கொப்பி ஒன்றை கொள்வனவு செய்து வியாபாரிக்கு ரூபாய் 50.00 நாணயத் தாள்கள் இரண்டைக் கொடுத்தபோது, வியாபாரி ரூபாய் 10.00 நாணயக் குற்றிகள் மூன்றும், ரூபாய் 5.00 நாணயக் குற்றிகள் இரண்டும் மீதிப் பணமாக கொடுத்தார். அதன்படி, பயிற்சிக் கொப்பியின் விலை யாது? .....

(26) பெட்டியொன்றில் 8 மாம்பழங்கள் வீதம் 4 பெட்டிகளில் மாம்பழங்கள் அடுக்கப்பட்டன. ஒரு மாம்பழத்தின் விலை ரூபாய் 6.00 எனின், 4 பெட்டிகளிலுள்ள மாம்பழங்களினதும் மொத்தப் பெறுமதி யாது? .....

(27) 8724 இவ் எண்ணின் பத்தினிடத்தில் எண்ணையும் ஆயிரத்தினிடத்தின் எண்ணையும் மாற்றினால் அமையும் எண் யாது?.....

(28) 

இந்த நீர்ப் பாத்திரத்திலுள்ள நீரின் அளவு *4l 750ml* ஆகும். இந்த பாத்திரத்திலுள்ள துளையொன்றினால் மணித்தியாலத்திற்கு 250 மில்லிலீற்றர் நீர் வெளியேறும். அதன்படி, 4 மணித்தியாலங்களின் பின்னர் இப்பாத்திரத்திலுள்ள நீரின் அளவு யாது? .....

(29)  இத்திண்மத்திலுள்ள,
(i) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..... (ii) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .....

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) சங்கீதத்திலுள்ள ஸ்வரங்களின் எண்ணிக்கை,
(1) 6 (2) 7 (3) 9

(31) வயல்களில் உழுவதற்குப் பயன்படுத்தப்படும் பிராணி,
(1) எருமை (2) கழுதை (3) குதிரை


(32) மரங்களின் தண்டுகளை தனது சொண்டினால் துளையிட்டு வீட்டைக் கட்டும் பறவை,
(1) கழுகு (2) கொக்கு (3) மரங்கொத்தி

(33) நீர்ப் பாத்திரமொன்றினுள் பென்சிலை இட்டால் புலப்படும் முறை,
(1)  (2)  (3) 

(34) ஒரே வகையைச் சாராத உணவுகளைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.
(1) உருளைக்கிழங்கு, சோறு, பலா (2) இறைச்சி, கருவாடு, பருப்பு (3) மீன், பசளி, பாண்

(35) இரவு நேரங்களில் ஒளியை நாடிவரும் பூச்சி,
(1) தேனீ (2) ஈசல் (3) வண்ணத்துப்பூச்சி

(36) சூரிய நமஸ்காரப் படிமுறையின் மூன்றாவது சந்தர்ப்பம்,
(1)  (2)  (3) 

(37)  உருவில் காட்டப்பட்டுள்ள முறையில் இலைகளைக் கொண்ட தாவரம்,
(1) கறிவேப்பிலை (2) புளி (3) சாத்தாவாரி

(38)  படத்தில் உள்ள கலையாக்கத்தைக் காணக்கூடிய இடம்,
(1) அநுராதபுரத்தில் (2) பொலன்னறுவையில் (3) கண்டியில்

(39) நான்கு சிறகுகளைக் கொண்டுள்ள பூச்சி,
(1) தும்பி (2) அந்துப்பூச்சி (3) வீட்டு ஈ

(40)  உருவில் காட்டப்பட்டுள்ள இலைகளைக் கொண்ட கொடி வகை,
(1) வற்றாளை (2) முடக்கொத்தான் (3) கொடித்தோடை

(41) உங்களுக்கு மயக்கம் ஏற்படுவதை உணர்ந்தால் நீங்கள் உடனடியாகச் செய்ய வேண்டியது,
(1) உடனடியாக நிலத்தில் அமர்தல். (2) ஓடிச் சென்று கதிரையில் அமர்தல்.
(3) அருகிலுள்ள மரத்தை இறுக்கமாகப் பிடித்தல்.

(42)  இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள விளையாட்டு,
(1) ஈட்டியெறிதல் (2) குண்டெறிதல் (3) பரிதிவட்டம் வீசுதல்.

(43)  ஒரு பொருள் இடப்பட்ட பெட்டியில் இத்தகையக் குறியீடு காணப்பட்டது. இக்குறியீட்டின் கருத்து,
(1) இப்பக்கம் மேலே (2) கவனமாகக் கையாளுங்கள். (3) நொருங்கக்கூடியது.

www.ikedu.lk

(44) அரசினால் எமக்கு இலவசமாகப் பெற்றுத்தரப்படும் சேவை அல்லாதது,

(1) கல்வி (2) சுகாதார சேவை (3) மின்சாரம்

(45) வேரினால் தாவரத்திற்கு கிடைக்கும் பிரதான பயன் அல்லாதது,

(1) பூக்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல் (2) தாவரம் நிலையாக நிற்பதற்கு உதவுதல்

(3) நீர் மற்றும் உரங்களை உறிஞ்சுதல்

(46) இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படும் வர்ணங்களாவன,

(1) நீலம், மஞ்சள், சிவப்பு, பச்சை (2) மஞ்சள், செம்மஞ்சள், வெள்ளை, சிவப்பு (3) பச்சை, சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள்

(47) மழைவீழ்ச்சி அளக்கப்படுவது,

(1) மில்லிமீற்றரில் (2) மில்லிலீற்றரில் (3) மீற்றரில்

(48) எண்ணெய்யை பெற்றுக்கொள்ளக்கூடிய வித்துக்கள் கொண்ட விடையை தெரிவு செய்க.

(1) குரக்கன், பயறு, மிளகு (2) எள்ளு, சூரியகாந்தி, கடுகு (3) நெல், கோப்பி, உழுந்து

(49) A, B ஆகிய உருக்களினால் காட்டப்பட்டுள்ள பறவைகளின் பெயர்கள்,

உரு A 

உரு B 

(1) A - மீன்கொத்தி , B - மரங்கொத்தி

(2) A - செண்பகம் , B - ஆந்தை

(3) A - கழுகு , B - தேன்குருவி

(50) நச்சுத்தன்மையான கிழங்குகளைக் கொண்ட தாவரம்,


(1) வற்றாளை (2) நொச்சி (3) கார்த்திகை


(51) சூரிய கிரகணத்தில் ஏற்படுவது,

(1) சந்திரனின் ஒளி படிப்படியாகக் குறைவடைதல். (2) சூரிய ஒளி படிப்படியாகக் குறைவடைதல்.

(3) சூரிய ஒளி படிப்படியாக அதிகரித்தல்.

(52) இரண்டு உலர் மின்கலங்கள் செப்புக்கம்பியின் மூலம் மின்குமிழொன்றுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்களைப் பின்வரும் உருக்கள் காட்டுகின்றன. அதன்படி, மின்குமிழ் ஒளிரும் சந்தர்ப்பம்,

(1) 

(2) 

(3) 

(53) பூரண பௌர்ணமி தினத்திற்கு 11 நாட்களுக்கு பின்னர் எமக்கு சந்திரன் வானில் காணக்கிடைக்கும் முறை,

(1) 

(2) 

(3) 

(54) மாவில் இருந்து பசை செய்யும்போது அதனுடன் கலக்கப்படுவது,

(1) அயடீன் (2) பல்மாணிக்கம் (3) உப்பு

(55) நிஸார் பகலுணவாக சோறு, இறைச்சி, மரமுந்திரிகை, கரட், பூசணி ஆகிய உணவுகளை உட்கொண்ட பின் பழுத்த வாழைப்பழம் ஒன்றை உட்கொண்டான். இப்பகலுணவு வேளையானது கலப்புணவு வேளையாக அமைவதற்கு இவ்வுணவுகளுடன் சேர்க்க வேண்டிய இன்னுமோர் உணவு வகை,

(1) பருப்பு (2) உருளைக்கிழங்கு (3) கீரை வகை

(56) ஓட்டப்போட்டியொன்றை ஆரம்பிக்கும்போது வழங்கப்படும் கட்டளைகளை ஒழுங்குமுறையாக ஒழுதினால் கிடைப்பது,

(1) குறிப்பிற்குச் செல் - ஆயத்தமாகு - ஓடு (2) ஆயத்தமாகு - குறிப்பிற்குச் செல் - ஓடு

(3) குறிப்பிற்குச் செல் - ஓடு - ஆயத்தமாகு

(57) சீகிரியாவை ஆட்சி செய்த மன்னன்,

(1) ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் (2) காசியப்பன் (3) மகா பராக்கிரமபாகு

(58) குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்பாக தாய்மாருக்கு ஆலோசனை வழங்குவதற்காக வீடுகளுக்கு வருகை தரும் அரச அதிகாரி,

(1) கிராம சேவை உத்தியோகத்தர் (2) பொதுச் சுகாதார பரிசோதகர் (3) குடும்ப சுகாதார சேவையாளர்

(59) தனது குட்டிகளை தனது வயிற்றில் ஏந்திச் செல்லும் பிராணி,

(1) குரங்கு (2) அணில் (3) எலி

(60) **"ஏழை, பணக்காரர் அனைவரினதும் நண்பனான ஈருருளி நானாவேன்." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) .....

(2) .....

(3) .....

www.ikeduk.lk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-14

சுட்டெண்:- .....

வினாத்தாள் - I

நேரம் :- 1 மணித்தியாலம்

- பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
  - * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

(01) 

இவ்வுருவிற்கு மிகப் பொருத்தமான மூன்று சொற்கள்,

(1) மாட்டுவண்டி - வீதி - பாரம் (2) சேறு - வயல் - மண்

(3) வாவி - புற்கள் - தொழில்

(02) நாம் மிகச் சரியான முறையில் நேரத்தை கூறத்தக்க சந்தர்ப்பம்,

(1) செக்கன் முள் மட்டும் உள்ள கடிகாரத்தைப் பார்ப்பதன் மூலம்


(2) நிமிட முள் மட்டும் உள்ள கடிகாரத்தைப் பார்ப்பதன் மூலம்

(3) மணித்தியால முள் மட்டும் உள்ள கடிகாரத்தைப் பார்ப்பதன் மூலம்

(03) போத்தலின் மூடியை கழற்றும் திசையைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.

(1) 


(2) 

(3) 

(04) ஐந்து பிள்ளைகள் வாங்கில் அமர்ந்திருக்கின்றார்கள். வசந்தியிற்கும் ஆஷாவிற்கும் சரிநடுவே நித்யா அமர்ந்திருக்கிறார். நிஹாராவிற்கும் வசந்தியிற்கும் சரிநடுவே பாத்திமா அமர்ந்திருக்கிறார். அதன்படி, பிள்ளைகள் அமர்ந்திருக்கும் ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) நித்யா - ஆஷா - வசந்தி - நிஹாரா - பாத்திமா (2) நிஹாரா - பாத்திமா - வசந்தி - நித்யா - ஆஷா

(3) நிஹாரா - பாத்திமா - நித்யா - வசந்தி - ஆஷா


(05) 

தோட்டமொன்றிலுள்ள மரங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் இவ்வட்ட வரைபில் காட்டப்பட்டுள்ளது. தோட்டத்திலுள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை 40 எனின், தோட்டத்திலுள்ள பழ மரங்களின் எண்ணிக்கை,

(1) 30 (2) 15 (3) 20

(06) ஒரு மாதத்தின் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகும். அம்மாதத்தின் இறுதித் திகதி செவ்வாய்க்கிழமை ஆகும். அதன்படி, அம்மாதமாக இருக்கக்கூடியது,

(1) ஏப்ரல் (2) பெப்ரவரி (3) டிசம்பர்

(07) 

இத்திண்மம் ஒரேயளவான சிறிய சதுரமுகிகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, பெரிய சதுரமுகியொன்றை அமைப்பதற்கு இன்னும் தேவைப்படும் மிகக் குறைந்த சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,


(1) 8 (2) 7 (3) 9

(08)
M H N
− R T R

T = 1, H = 4, M = 6, B = 3, N = 8, R = 2

இதன் விடையைக் குறியீடுகளினால் எழுதும்போது கிடைப்பது,

(1) B R T (2) H B M (3) N M B

(09) 

உருவில் P யிலிருந்து Q வரை இரு பிள்ளைகள் பயணித்த பாதைகள் அம்புக்குறிகளின் மூலம் காட்டப்பட்டுள்ளன. பைசர் பயணித்த பாதையை → எனும் குறியீட்டினால் காட்டப்பட்டுள்ளது. சச்சின் பயணித்த பாதையை ↠ எனும் குறியீட்டினால் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, இரு பிள்ளைகளும் ஒரே பாதையில் பயணித்த தடவைகளின் எண்ணிக்கை,

(1) 2 (2) 3 (3) 1

www.ikedu.lk

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk


(10) இரண்டில் ஆரம்பித்து இரண்டில் முடிவடையும் மூன்று இலக்கங்களைக் கொண்ட எண்கள் எத்தனை?

(1) 11 (2) 9 (3) 10

(11) எனது தாயின் வயது அக்காவின் வயதிலும் 3 மடங்காகும். அக்கா என்னிலும் 4 வயது மூத்தவள். எனது வயது 12 எனின், எனது தாயின் வயது,

(1) 46 (2) 48 (3) 54

(12)



இவ்வுருவில் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, (A), (B) ஆகிய வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான எண்கள்,

(1) A = 15 , B = 3 (2) A = 18 , B = 2 (3) A = 20 , B = 4

(13) 40m நீளமான பாதையொன்றின் இருபக்கமும் 4m இடைவெளியில் கம்பங்கள் நட்டால், நடுவதற்கு தேவையான கம்பங்களின் எண்ணிக்கை,

(1) 20 (2) 22 (3) 11

(14) 80 இன் $\frac{1}{2}$ பகுதியின் $\frac{1}{4}$ பங்கு எத்தனை?

(1) 20 (2) 5 (3) 10

(15) ஒரு மரக்கட்டையை நான்கு சம துண்டுகளாக வெட்டுவதற்கு 24 நிமிடங்கள் செலவாகும். அந்த மரக்கட்டையை ஐந்து சம துண்டுகளாக வெட்ட எத்தனை நிமிடங்கள் செலவாகும்?


(1) 30 நிமிடங்கள் (2) 32 நிமிடங்கள் (3) 40 நிமிடங்கள்

(16) "அண்ணன் புத்தகம் வாங்குவதற்கு கடைக்குச் சென்றார். விவசாயிகள் அறுவடை செய்வதற்கு வயல்களுக்குச் சென்றனர்.

அண்ணன் : விவசாயிகள் எனின் கடைக்கு : .....

(1) புத்தகம் (2) சென்றனர் (3) வயல்களுக்கு


(17)



உருவில் உள்ள திண்மத்தில் இருக்கும் மேற்பரப்புகளின் எண்ணிக்கை,

(1) 14 (2) 12 (3) 16

(18) தரப்பட்டுள்ள வடிவங்களில் மூன்றைச் சேர்த்து ஒரு செவ்வகத்தை அமைக்கலாம். அந்த மூன்று வடிவங்களின் இலக்கங்களை எழுதினால் கிடைப்பது,



(1) 1, 3, 5
(2) 3, 2, 5
(3) 4, 3, 1

(19) ரஞ்சித், மோகன், நாதன், ரவி ஆகிய நால்வரினதும் தற்போதைய வயதுகளின் கூட்டுத்தொகை 38 வருடங்கள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் நால்வரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 46 வருடங்களாகும்?

(1) 2 வருடங்களில் (2) 4 வருடங்களில் (3) 3 வருடங்களில்

(20) ஒரு வீதியில் சில வாகனங்கள் சென்றன. அவற்றில் ஒன்றுக்கு முன்னால் ஐந்து வாகனங்களும் ஒன்றுக்குப் பின்னால் மூன்று வாகனங்களும் சென்றன. அதன்படி, அங்கு சென்ற வாகனங்களின் மிகக் குறைந்த எண்ணிக்கை,

(1) 9 (2) 7 (3) 6

(21)




இக்கடிகார முகம் காட்டும் நேரம்,

(1) காலை நேரம் அல்லது மாலை நேரமாகும். (2) காலை நேரம் அல்லது இரவு நேரமாகும்.

(3) மாலை நேரம் அல்லது இரவு நேரமாகும்.

(22)



A, B, C எனும் மூன்று பெட்டிகளினுள் உருவில் காட்டியுள்ள முறைப்படி, பந்துகள் உள்ளன. மூன்று பெட்டிகளிலும் உள்ள பந்துகளின் எண்ணிக்கை ஒன்றுக்கொன்று சமனாவதற்கு,

(1) C பெட்டியிலிருந்து A பெட்டிக்கு 2 பந்துகளும் B பெட்டிக்கு ஒரு பந்தும் இட வேண்டும்.

(2) C பெட்டியிலிருந்து A பெட்டிக்கு ஒரு பந்தும் B பெட்டிக்கு 3 பந்துகளும் இட வேண்டும்.


(3) C பெட்டியிலிருந்து A பெட்டிக்கு 3 பந்துகளும் B பெட்டிக்கு ஒரு பந்தும் இட வேண்டும்.

www.ikeou.lk

(23) மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் கொண்ட கடிகார முகமொன்றை முகம் பார்க்கும் கண்ணாடியொன்றினுள் பார்க்கும்போது அக்கடிகார முகத்தின் உண்மை நேரம் மாற்றமடையாமல் புலப்படும் சந்தர்ப்பம்,

(1) 6.00 (2) 3.00 (3) 1.00


(24)




ஒரு மீற்றர் நீளமுள்ள கம்பியொன்று சம பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ள முறை உருவில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, எறும்புக்கு இக்கம்பியினூடாக P வரை பயணிக்க வேண்டிய தூரம்,

(1) 56cm (2) 60cm (3) 45cm

(25) பின்வரும் 1, 2 ஆகிய உருக்களில் இலக்கங்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, 3 ஆவது உருவின் வெற்றுவட்டத்திற்கும், வெற்றுமுக்கோணத்திற்கும் பொருத்தமான எண்கள்,



உரு 1 உரு 2 உரு 3

(1) 

(2) 


(3) 

(26) கீழே பிராணிகள் சிலவற்றின் பெயர்கள் காட்டப்பட்டுள்ளன.

P - நண்டு Q - பூரான் R - உண்ணி S - கரப்பான்

ஒவ்வோர் பிராணியினதும் கால்களின் எண்ணிக்கை கூடிச்செல்லும் ஒழுங்கில் பிராணிகளின் பெயர்களுக்குரிய ஆங்கில எழுத்துக்களை எழுதினால் கிடைப்பது,


(1) P, R, S, Q (2) S, Q, P, R (3) S, R, P, Q


(27) 


இந்த கேக்கை சமனான 16 துண்டுகளாக வெட்டுவதற்கு கத்தியொன்றினால் வெட்ட வேண்டிய மிகக் குறைந்த தடவைகளின் எண்ணிக்கை,

(1) 7 (2) 6 (3) 8

(28) முதலில் தரப்பட்டுள்ள திண்மத்தை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படாத க்ார்ட்போர்ட் அட்டையை கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(1) 

(2) 


(3) 


(29) 


இந்த வீதிச் சமிக்ஞைகள் மிகவும் தேவைப்படுபவர்கள்,

(1) பாதசாரிகளுக்கு (2) புகையிரத ஓட்டுனர்களுக்கு (3) பேருந்து ஓட்டுனர்களுக்கு

(30) சம நீளமுள்ள 6 ஈர்க்குத் துண்டுகளினால் அமைக்க முடியாத உரு,

(1) 

(2) 

(3) 

(31) கீழே A, B, C, D இல் காட்டப்பட்டுள்ள உவமைத் தொடர்களை நன்கு வாசியுங்கள்.

A - சூரியனைக்கண்ட பனிபோல
B - ஊசியும் நூலும்போல
C - கல்லில் நார் உரிப்பதுபோல
D - உருவும் நிழலும்போல

மேலே தரப்பட்டுள்ள உவமைத் தொடர்களில் சமனான கருத்தை வெளிப்படுத்தும் உவமைத் தொடர்கள்,

(1) B மற்றும் D (2) A மற்றும் C (3) C மற்றும் D

(32) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

பலவும் படித்து நீங்கள்
பட்டம் பெற்ற போதும்
உலகத்தோடும் ஒத்தே
ஒழுகிக் கொள்ள வேண்டும்.

இப்பாடலில் கூறப்படுவது,

(1) உலகம் பற்றி
(2) நல்லொழுக்கம் பற்றி
(3) கல்விப் பற்றி

www.ikedu.lk

(33)

1	2	3	4	5	6	7	8	9	10	11

சிறுவன் ஒருவன் 1 ஆம் இலக்கக் கூட்டில் இருந்து தொடங்கி இரு கூடுகளைத்தாண்டி முன்னால் உள்ள கூட்டிற்குப் பாய்ந்து, பின்னர் பின்னால் உள்ள கூட்டிற்குப் பாய்கிறான். இவ்வாறு அவன் தொடக்கத்தில் இருந்து முறையே முன்னாலும் பின்னாலும் பாய்ந்த கூடுகளின் இலக்கங்கள் முறையே 4, 3, 6, 5, 8, 7 ஆகும். இதற்கேற்ப அவன் 8 ஆவது தடவையாக பாயும் கூட்டின் இலக்கம்,

(1) 9 (2) 10 (3) 11

(34) வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினாலும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சு வாயுக்களாலும் வளி மாசடைகின்றது. அவ்வாறு மாசடைந்த வளியைச் சுவாசிப்பதனால் மனிதன் நோய்வாய்ப்படுகின்றான். அவனது உடல் நலம் கெடுகின்றது.

இவ்விபரங்களில் சொல்லப்படுகின்ற கருத்து,

(1) தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களினால் மட்டும் வளி மாசடைகின்றது.

(2) மாசடைந்த வளியை சுவாசிப்பது உடல் நலத்திற்கு கேடானது.

(3) மாசடைந்த வளியை சுவாசித்தல் மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு பிரதான காரணமாகும்.

(35) மூன்று பிள்ளைகள் தவணைப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுக்கொண்ட புள்ளி கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுக்கொண்டப் புள்ளி குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

	சமயம்	தமிழ்	கணிதம்	கூற்றாடல்
தமயந்தி	□	△	✳	✳
சியானா	△	○	□	✳
நிஹாரா	□	✳	△	△

△ = 60
○ = 80
□ = 40
✳ = 50

பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளின்படி, பிள்ளைகளின் பெயர்களை இறங்குவரிசைப்படுத்தி எழுதினால் கிடைப்பது,

(1) சியானா - நிஹாரா - தமயந்தி (2) நிஹாரா - தமயந்தி - சியானா (3) தமயந்தி - சியானா - நிஹாரா

(36) மீனா, ஆஷா, நீலா, சித்ரா ஆகிய நான்கு பிள்ளைகள் ஓட்டப்போட்டியில் பங்குபற்றினர். சித்ரா நீலாவை விட வேகமாக ஓடினாலும் மீனாவிற்குப் பின்னால் ஓடினாள். மீனாவிற்கு ஆஷாவைப்போல வேகமாக ஓட முடியவில்லை.

இவ்விபரங்களின்படி, சரியான கூற்று,

(1) மீனா கடைசியாக வந்தாள. (2) சித்ரா இரண்டாவதாக வந்தாள்.

(3) ஆஷா போட்டியில் வெற்றிப் பெற்றாள்.

(37) 1, 2, 3 ஆம் கூடுகளில் ஆங்கில எழுத்துக்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, 4 வது வெற்று கூட்டிற்குப் பொருத்தமான ஆங்கில எழுத்துக்களையுடைய கூட்டை தெரிவு செய்க.

P Q R S T U	U P Q R S T	T U P Q R S	
1	2	3	4

(1) P S Q / T R U (2) S T U / P Q R (3) S R Q / P U T

(38) கீழே தரப்பட்டுள்ள விபரங்களினால் குறிப்பிடப்படும் சொல்லை தெரிவு செய்க.

முதலெழுத்து உடையில் உண்டு. ஆனால் கடையில் இல்லை.

இரண்டாம் எழுத்து மரத்தில் உண்டு. ஆனால் கரத்தில் இல்லை.

மூன்றாம் எழுத்து புதுமையில் உண்டு. ஆனால் புலமையில் இல்லை.

(1) உமது (2) கரடி (3) உரல்

(39) ஒரு வீட்டில் இருக்கும் உறவினர்களின் வயதுகள் படிப்படியாக குறைந்து செல்லும் ஒழுங்கில் எழுதினால் கிடைப்பது,

(1) அம்மா - பாட்டன் - தங்கை - நான் - அண்ணா (2) பாட்டி - அப்பா - தம்பி - அண்ணா - நான்

(3) பாட்டன் - அம்மா - அக்கா - நான் - தங்கை

(40) 

இக்கடிகார முகத்தின் நிமிட முள் சரியாக 11 வது இலக்கத்திற்கு நேராக உள்ளது. அதன்படி, மணித்தியால முள் இருக்க வேண்டிய இடம்,

(1) 6 வது இலக்கத்திற்கு முன் 5 வது இலக்கத்திற்கு அருகில்

(2) 8 வது இலக்கத்திற்கு முன் 8 வது இலக்கத்திற்கு அருகில்

(3) 1 வது இலக்கத்திற்கு பின் 1 வது இலக்கத்திற்கு அருகில்

www.ikedu.lk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022
தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-14
வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
*** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
*** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

இராக்காலம் தான் எனக்கு வசதியான நேரம். எனக்கு கடுமையான குரல் உண்டு. விரும்பத்தகாத என் அலறலைக் கேட்டு மனிதர்கள் பீதியடைவார்கள். ஏதோ அபசகுனம் என்று என்னை விரட்டுவதற்காக முயற்சிப்பார்கள். வட்டமான என் இரு பெரிய கண்களிலும் உள்ள கண்மணிகளை உருட்டிஉருட்டி நான் பார்க்கும்போது அவற்றிலிருந்து வீசும் ஒளி பயங்கரமானது என்பதால் என்னை பேய்போல மனிதர்கள் கருதுகின்றார்கள். பட்டுப்போன்ற எனது இறகுகள் ஒலியெழுப்பாமல் பறந்து சென்று இரையைப் பிடித்துக்கொள்வதற்கு உதவுகின்றன. மிகக் கூரான என் அலகு இரையைக் கிழித்து உண்ண உதவுகின்றது.

(i) மேலுள்ள விவரணத்தில் தன்னைப் பற்றி கூறும் உயிரினம் எது? .....

(ii) "இருள்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக. .....

(iii) "சொண்டு" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக? .....

(iv) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள காலப்பெயரை குறிப்பிடுக? .....

(v) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள அடுக்குமொழிச் சொல்லொன்றை எழுதுக? .....

(02) பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

நீ எங்கே போனாய்? :- .....

(03) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களின் இடைவெளிகளுக்குப் பொருத்தமான இளமைப் பெயர்களை எழுதுக.

(i) கூட்டிலிருந்த அணில் ..... கீழே விழுந்தது.

(ii) கோழி தனது ..... களுடன் இரை தேடியது.

(04) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) கடலில் கப்பல் செலுத்துபவன் :- .....

(ii) களியைக் கொண்டு பானை செய்பவன் :- .....

(05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான இரட்டைக்கிளவியைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) வருண் எப்போதும் ..... என்று கதைப்பான். (1) வளவள (2) பளபள (3) கமகம

(ii) தம்பியின் சில்லுவண்டியில் இருந்து ..... என்று சத்தம் கேட்டது. (1) சுறுசுறு (2) கலகல (3) கடகட

(06) கீழே உள்ள ஒவ்வொரு உவமை தொடரினதும் கருத்தினை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) நகமும் சதையும்போல (1) மறைதல் (2) ஒற்றுமை (3) பகை உணர்வு

(ii) கல்லின் மேல் எழுத்துப்போல (1) மகிழ்ச்சி (2) பயனற்ற நிலை (3) நிலையானது

(07) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) அ்றிணை படர்க்கை பன்மைப் பெயர்ச்சொல் :- (நாங்கள் , பறவைகள் , மாணவர்கள்)

(ii) உயர்திணை படர்க்கை பன்மைப் பெயர்ச்சொல் :- (அவர்கள் , உனது , நீவிர்)

www.ikeu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

(08) இடைவெளிகளுக்குப் பொருத்தமான மரபுத் தொடர்களை கூட்டினுள் இருந்து தெரிவுசெய்து உரிய புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

காது கொடுத்தல் ,	கை கொடுத்தல் ,	முகங்கொடுத்தல்

(i) ஏழை எளியவர்களுக்கு ..... வேண்டும்.

(ii) எமக்குத் துன்பங்கள் வரும்போது அவற்றிற்கு துணிவுடன் ..... வேண்டும்.

(iii) பெற்றோர் கூறும் விடயங்களுக்கு பிள்ளைகள் ..... வேண்டும்.

(09) கூட்டத்தைக் குறிக்கும் மரபுச் சொல்லை தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) பல் :- (தொடர் , வரிசை , குழு) (ii) கள்வர் :- (கற்றை , குவியல் , கூட்டம்)

(10) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான பெண்பால் சொற்களைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) தச்சன் :- ..... (ii) செவிடன் :- .....

(11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) It ..... (have / has) two ears. (ii) ..... (Is / Are) this your bag?

(12) தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(i) Run :- ..... (ii) Jump :- .....

(13) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(i) Look at me :- ..... (ii) Clap your hands :- .....

(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

அம்ப எப்பா :- .....

(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

நாய் வெளியே இருக்கிறது :- .....

(16) (i) கழிக்குக. 7000 - 10 = ...

(ii) எண் 9547 இல் இலக்கம் ஐந்தினால் காட்டப்படும் பெறுமதி யாது? .....


(17) 510 பென்சில்களை ஒரு பெட்டியில் ஆறு பென்சில்கள் வீதம் அடுக்கப்பட்டன. அதன்படி, ஆறு பென்சில்கள் வீதம் அடுக்கப்பட்டுள்ள பெட்டிகளின் எண்ணிக்கை யாது? .....

(18) $16l\ 800ml$ நீர் நிரப்பக்கூடிய தொட்டியொன்றில் $\frac{1}{4}$ பகுதி வரை நீர் ஊற்றப்பட்டுள்ளது. அத்தொட்டியை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவைப்படும்? .....l .....ml

(19) புகையிரத நிலையத்திற்கு 23:45 மணித்தியாலத்திற்கு வரவேண்டிய புகையிரதம் 30 நிமிடங்கள் தாமதமாக வருவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கேற்ப அப்புகையிரதம், புகையிரத நிலையத்திற்கு வரும் நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக. .....

(20) நஸீர் A என்னும் இடத்திலிருந்து கிழக்குத் திசை நோக்கி 40 மீற்றரும் பின்னர் அவ்விடத்திலிருந்து வடக்குத் திசை நோக்கி 40 மீற்றரும் சென்று B என்னும் இடத்தில் நிற்கிறான். அதன்படி, B இற்கு எத்திசையில் A அமைந்துள்ளது?

.....

(21) 

உருவின்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

(i) நிழற்றப்படாத பகுதியை பின்னமாக எழுதுக. .....

(ii) நிழற்றிய பகுதியை தசம எண்ணாக எழுதுக. .....

(22) கீழே தரப்பட்டுள்ள எண் கோலத்தை பூரணப்படுத்துக.

70 , 64 , 58 , ... , ... , 40

(23) சமனான 4 செவ்வகங்களையும் சமனான 2 சதுரங்களையும் கொண்ட தின்மத்திலுள்ள,

(i) உச்சிகளின் எண்ணிக்கை யாது? .....

(ii) முகங்களின் எண்ணிக்கையினதும் விளிம்புகளின் எண்ணிக்கையினதும் கூட்டுத்தொகை யாது? .....

(24) ஒரு வாழைப்பழச்சீப்பில் 10 வாழைப்பழங்கள் உள்ளன. அவற்றின் விலை ரூபாய் 60.00 ஆகும். அதன்படி, அவ்வாறான 8 வாழைப்பழங்களை உடைய வாழைப்பழச்சீப்பின் விலை யாது? .....

www.ikedu.lk

சுட்டெண்:-.....

(25)

XV	XVI	XIV
XX		XVIII

இக்கட்டத்திலுள்ள உரோம எண்குறிகளை பெறுமதி கூடிச்செல்லும் ஒழுங்கில் எழுதுக.

.....


(26) ஒரு குறிப்பிட்ட பொருளின் நிறையை அளவிடுவதற்கு பயன்படுத்திய படிக்கற்களின் எண்ணிக்கையை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

1kg	500g	200g	50g
2	4	3	2

இவ்வட்டவணையின்படி, பொருளின் நிறை எவ்வளவு?

..... kg ..... g

(27)



இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள காணியின் அரைவாசியில் தென்னை மரங்களும், $\frac{1}{4}$ இல் பப்பாசி மரங்களும் நாட்டப்பட்டுள்ளன. அவ்வாறு நாட்டப்பட்டுள்ள நிலத்தின் அளவு மொத்தக் காணியின் என்னப் பங்கு என்பதை நிழற்றிக் காட்டுக.

(28) கமல் நூலகத்திற்குச் சென்று 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் செலவிட்ட பின் அங்கிருந்து பிற்பகல் 5.30 மணிக்குப் புறப்பட்டான். அதன்படி, கமல் எத்தனை மணிக்கு நூலகத்திற்குச் சென்றான்? .....

(29) ஒரு கிலோகிராம் ரூபாய் 300.00 வீதம் 1kg 500g சீனியும் ஒரு லீற்றர் ரூபாய் 200.00 வீதம் 500ml பாலையும் கொள்வனவு செய்யும்போது செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு? .....

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) சூரிய கிரகணத்தை நாம் பார்ப்பதற்கு உகந்த முறை அல்லாதது,

(1) நீர் நிரம்பிய பாத்திரமொன்றினுள் பார்ப்பதன் மூலம். (2) சூரியனை நேரடியாகப் பார்ப்பதன் மூலம்

(3) எக்ஸ்ரே கடதாசியின் ஊடாக பார்ப்பதன் மூலம்

(31) நகரத்தில் பெரிய திருட்டு நடந்தால் மிக விரைவாக அழைக்க வேண்டிய தொலைபேசி எண்,

(1) 119 (2) 191 (3) 1969

(32) புல்லாங்குழல் செய்யப் பயன்படுத்தக்கூடிய தாவரம்,

(1) இறப்பர் (2) ஆமணக்கு (3) மூங்கில்

(33) நீருடன் கலக்கும்போது ஊதா நிறத்தைப் பெற்றுத்தருவது,

(1) கொண்டிஸ் தூள் (2) வினாகிரி (3) குளோரீன்

(34) வேர்களின் மூலம் புதிய தாவரங்களை பெறக்கூடியவை,

(1) மரவள்ளி, முருங்கை (2) ஈரப்பலா, கருவேப்பிலை (3) பெபரோமியா, பெகோனியா

(35) இலங்கையையும் இந்தியாவையும் பிரிப்பது,

(1) பாக்கு நீரிணை மூலம் (2) மகாவலி கங்கை மூலம் (3) விக்டோரியா அணைக்கட்டு மூலம்

(36) ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் பிராணி,

(1) நண்டு (2) இறால் (3) கடலாமை

(37) இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படாதது,

(1) வாள் (2) சிவப்பு நிறக் கீலம் (3) வெள்ளரசு இலை

(38) அஞ்சல் அடையாள அட்டையை பெற நாம் செல்ல வேண்டிய இடம்,

(1) பிரதேச சபைக்கு (2) அஞ்சல் திணைக்களத்திற்கு (3) இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு

(39) தேக்கரண்டி ஒன்று கொள்ளும் மருந்து திரவத்தின் அளவை அளவிடும் அலகு,

(1) மில்லிலீற்றர் (2) லீற்றர் (3) மில்லிமீற்றர்

(40) குழு விளையாட்டுக்களில் இருக்கக்கூடாத இயல்பு,

(1) தலைவனின் அறிவுறுத்தல்களின்படி விளையாடுதல். (2) தமக்கு விரும்பியவாறு செயற்படுதல்.

(3) வெற்றியையும் தோல்வியையும் சமனாக ஏற்றுக்கொள்ளல்.

(41) இலங்கையின் தேசியக் குறியீடுகளில் இரண்டு,

(1) சூரியன், சந்திரன் (2) தர்மச்சக்கரம், வாளேந்திய சிங்கம் (3) நாக மரம், காட்டுக்கோழி

(42) விற்றமின் A குறைபாட்டின் காரணமாக ஏற்படக்கூடிய நோய்,

(1) கண் பார்வை குறைவடைதல். (2) கண்டமாலை (3) உடல் வளர்ச்சி குன்றுதல்.

(43) குளத்திலிருந்து நீரை வெளியேற்றும் இடம் அழைக்கப்படுவது,

(1) நாம்புவ (2) செக்கு (3) மடைக்கதவு

www.ikedu.lk

(44) உடம்பில் தீப்பற்றிக்கொண்டால் முதலில் செய்யவேண்டிய முதலுதவி,

(1) தீக்காயம் ஏற்பட்ட பகுதியின் மீது எண்ணெய் பூசுதல். (2) தீக்காயத்தின் மீது குளிர்ந்த நீரை ஊற்றுதல்.

(3) நோயாளியை நன்கு காற்றோட்டம் கிடைக்கும் இடத்தில் வைத்தல்.

(45) வேலி ஒன்றில் கம்பித்தூண்கள் நடுவதற்கு மிகவும் தேவையான உபகரணம்,

(1)  (2)  (3) 

(46) அதிக விற்றமின்கள் அடங்கிய உணவு வகை,

(1) கிழங்குகளில் (2) இறைச்சிகளில் (3) புதிய பழங்களில்

(47) ஒரு குறிப்பிட்ட விழாவில் குத்துவிளக்கேற்றும் வைபவம் இடம்பெற்றது. இதில் குத்துவிளக்கு ஏற்றப்பட்ட சந்தர்ப்பமாக இருக்கக்கூடியது,

(1) விழாவின் முடிவில் (2) விழாவின் ஆரம்பத்தில் (3) பிரதம அதிதியின் உரை இறுதியில்

(48) சட்டக்காந்தமொன்றிற்குக் கவரப்படுவது,

(1) இரும்பாணி (2) பித்தளை ஆணி (3) அலுமினியத் துண்டு

(49) வெளிச்சத்தினைப் பெறுவதற்கு மின்மினிப்பூச்சியை தனது கூட்டினுள் ஒட்டி வைக்கும் பிராணி,

(1) பருந்து (2) குயில் (3) தூக்கணாங்குருவி

(50) பழுதடைந்ததும் நீல நிறமாக மாற்றமடையும் கிழங்கு வகை,

(1) வற்றாளை (2) மரவள்ளி (3) உருளைக்கிழங்கு

(51) கிருமிநாசினி தெளிக்கும்போது கட்டாயமாக அணிய வேண்டியது,

(1) கைக்கவசம் (2) காற்கவசம் (3) முகக்கவசம்

(52) சிறகுகளை அசைக்காமல் வானத்தில் மிக உயரமாக பறக்கும் பறவை,

(1) பருந்து (2) கானாங்கோழி (3) மயில்

(53) இதழ்கள் உதிர்ந்து காயாக மாறுவது பூவின் எப்பகுதியாகும்?

(1) குறி (2) சூலகம் (3) தம்பம்

(54) தானியங்களில் உள்ள தோல்கள், சிறிய உடைந்த பகுதிகளை அகற்றுவதற்கு சமையலறையில் பயன்படுத்தப்படும் உபகரணம்,

(1) சுளகு (2) அம்மி (3) உரல்

(55) வாழைப்பழத்தை மிக விரைவாக பழுக்கச்செய்யும் பாரம்பரிய முறை,

(1) மண்ணில் புதைத்தல். (2) குளோரீன் இடுதல். (3) புகையூட்டுதல்.

(56) பேருந்தில் பயணம் செய்வோர் கடைப்பிடிக்கக்கூடாத பழக்கம்,

(1) வயோதிபர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் ஆசனம் வழங்கல்.


(2) மிதிப்பலகையில் நின்று பயணம் செய்தல். (3) பேருந்தில் வரிசையாக நின்று ஏறுதல்.

(57) சாரதி பயிற்சி வாகனங்களின் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் தொங்கும் ஆங்கில எழுத்து,

(1) A (2) M (3) L

(58) தேசிய கீதத்தை இசைக்கும் சந்தர்ப்பங்களில் உடலை நேராக நிமிர்த்தி வைத்து கால்களை ஒடுக்கி கைகளின் விரல்களை மடித்து நிற்கும் நிலை,

(1) கவனமாக நிற்றல். (2) இலகுவாக நிற்றல். (3) அவதானத்துடன் நிற்றல்.

(59) 

உருவில் காட்டப்பட்டுள்ள முறைக்கேற்ப குறித்த பாத்திரமொன்றில் P, S, Q என துவாரங்கள் இடப்பட்டு நீரை நிரப்பும்போது அதிக தூரம் நீர் செல்லும் துவாரம்,

(1) S (2) Q (3) P

(60) "நான் செய்த பட்டம், அதோ பறக்கிறது பார்!" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(1) .....

(2) .....

(3) .....

www.ikedu.lk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-15

வினாத்தாள் - I

சுட்டெண்:-.....

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - **முன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) பொருத்தமற்ற உருவின் கீழ்க் கோடிடுக.

(1) 

(2) 


(3) 

(02) பின்வரும் வாக்கியத்தில் தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களுக்கு முறையே பொருத்தமான கருத்தைத் தரும் சொல் வரிசையைத் தெரிவு செய்க.

எனது அக்கா **அங்காடிக்குச்** சென்று **கனிகள்** வாங்கினார்

(1) சந்தைக்கு, பழங்கள் (2) வயலுக்கு, பழங்கள் (3) பலசரக்குக்கடைக்கு, மரக்கறி

(03) மண்ணெண்ணெய் விளக்கொன்று மு.ப 8 மணிக்கு ஏற்றப்பட்டு அதன்பின் அதில் மண்ணெண்ணெய் படிப்படியாக குறைந்து செல்லும் முறை கீழே உருக்களினால் காட்டப்பட்டுள்ளன.




அருகில் உள்ள உருக்களின்படி, விளக்கில் மண்ணெண்ணெய் முழுமையாக முடிவடையும் நேரம்,


(1) மு.ப 9.10 இற்கு


(2) மு.ப 9.20 இற்கு


(3) மு.ப 9.30 இற்கு

(04) கீழே கூடுகளினுள் உள்ள உருக்கள் ஒரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, A மற்றும் B கூடுகளுக்குப் பொருத்தமான உருக்களைத் தெரிவு செய்க.



(1) A =  , B = 

(2) A =  , B = 

(3) A = , B = 

(05) ஒரு பேருந்தில் இருவர் வீதம் அமரத்தக்க 9 பயணி ஆசனங்களும் மூன்று பயணிகள் வீதம் அமரத்தக்க 6 பயணி ஆசனங்களும் உள்ளன. பேருந்தில் 23 பயணிகள் பயணம் செய்தார்கள். அதன்படி, பேருந்தில் இருக்கக்கூடிய பயணிகள் அமராத அதிகபட்ச ஆசனங்களின் எண்ணிக்கை,

(1) 6 (2) 8 (3) 7

(06) நீளம், அகலம், உயரம் ஆகியன 3cm வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகியில் இருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 1cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 18 (2) 27 (3) 36

(07) பாலா, சிவா, அமீன், கதிர், நஸீர் ஆகிய ஐந்து பிள்ளைகளும் வரிசையொன்றில் நின்றுகொண்டிருந்தனர். சிவா வரிசையில் முதலாவதிலிருந்து 4 வதாக நின்றுகொண்டிருந்தான். கதிருக்கு முன்னால் பாலா நின்றுகொண்டிருந்தான். கதிருக்கும் நஸீருக்கும் இடையில் இரு பிள்ளைகள் நின்றுகொண்டிருந்தனர். அதன்படி, அமீன் வரிசையில் முதலாவதிலிருந்து எத்தனையாவதாக நின்றுகொண்டிருந்தான்?

(1) இரண்டாவதாக (2) மூன்றாவதாக (3) ஐந்தாவதாக

✱ **அடைப்பில் குறிப்பிட்ட சொற்களுக்கும் ஆங்கில எழுத்துக்களுக்கும் ஏற்ப (8) ஆம் (9) ஆம் வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

மைதானத்தில்	- A	விளையாடினான்	- E
குடிக்கும்	- B	பிள்ளை	- F
மகிழ்ச்சியாக	- C	சிறுவன்	- G
பால்	- D	அழுத	- H

(08) அர்த்தமுள்ள வாக்கியமாக அமையும் பொருத்தமான எழுத்துக்களின் கூட்டம்,

(1) G, A, C, E (2) B, F, H, A (3) G, B, H, F


(09) பழமொழியைக் குறிப்பிடும் பொருத்தமான எழுத்துக்களின் கூட்டம்,

(1) H, A, C, F (2) F, D, C, B (3) H, F, D, B

www.ikedu.lk



LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

(10) இவ்விரு பாத்திரங்களையும் மாத்திரம் பயன்படுத்தி 1 லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?



(1) முடியும். (2) முடியாது. (3) கூறமுடியாது.


(11)




அருகே குறியீடுகளின் மூலம் இருபதை விட குறைந்த எண்கள் காட்டப்பட்டுள்ளன. இத்தொடர்புகளின்படி, வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்,

(1) 12 (2) 20 (3) 24

(12) ஒரு பொருளினை மேலே இருந்து நேரடியாகப் பார்க்கும்போது அது தோன்றும் விதம் முதலில் தரப்பட்டுள்ளது. இப்பொருளைப் பக்கத்தில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதத்தினைக் காட்டும் உருவினைத் தெரிவு செய்க.




(13) பின்வரும் பொருட்களின் விலைகளைப் பரிசீலித்துப் பார்க்குக.




இவ்விலைகளின்படி, அடிமட்டத்தின் விலை,

(1) ரூபாய் 5.00 (2) ரூபாய் 10.00 (3) ரூபாய் 15.00

(14) 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்ட தாயக்கட்டையொன்றை இரு பக்கங்களில் இருந்து பார்த்தபோது புலப்பட்ட முறைகளைக் கீழுள்ள A, B ஆகிய உருக்கள் காட்டுகின்றன.



இத்தாயக்கட்டையை வேறொரு திசையிலிருந்து பார்க்கும்போது புலப்படும் முறை,



(15) 6 மீற்றர் நீளமும் 2 மீற்றர் உயரமும் உள்ள சுவருக்குப் பூச 3 லீற்றர் வர்ணப்பூச்சு தேவைப்படுகின்றது. 4 மீற்றர் நீளமும் 3 மீற்றர் உயரமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்குப் பூச எத்தனை லீற்றர் வர்ணப்பூச்சு தேவைப்படும்?

(1) 4 லீற்றர் (2) 3 லீற்றர் (3) 2 லீற்றர்


(16) முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நின்றுகொண்ட ஒருவர் தனது உருவத்தைப் பார்த்துக் கூறிய கூற்றுக்களுக்கிடையே மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) இக்கண்ணாடி காட்டுபவரின் அம்மா எனது மாமி ஆவார்.

(2) இக்கண்ணாடி காட்டுபவரின் அம்மா எனது மகளின் அம்மா ஆவார்.

(3) இக்கண்ணாடி காட்டுபவரின் அம்மா எனது அம்மா ஆவார்.

(17) உடைந்த முக்கோண வடிவ கண்ணாடி ஒன்றின் கண்ணாடித் துண்டுகள் பின்வரும் உருக்களில் காணப்படுகின்றன.



முக்கோண வடிவ கண்ணாடித் துண்டை ஆக்குவதற்குப் பொருத்த வேண்டிய மூன்று கண்ணாடித் துண்டுகள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.


(1) 1, 2, 5 (2) 4, 3, 6 (3) 1, 3, 4

(18) சிவகுமார் நண்பகல் 12.00 மணிக்கு வீட்டிலிருந்து வெளியே வந்து வானைப் பார்க்கும்போது வானில் பறந்து செல்லும் வெளவால்க் கூட்டத்தைப் பார்த்தான். இக்கூற்று பிழையானது என்பதற்கான காரணம்,

(1) வெளவால்களுக்கு பறக்க முடியாது என்பதனாலாகும். (2) வெளவால்கள் பறப்பது, மழைக்காலம் என்பதனாலாகும்.

(3) வெளவால்கள் பறப்பது, இரவு நேரம் என்பதனாலாகும்.

(19)



தராசு ஒன்றில் 3 திண்மங்கள் நிறுக்கப்பட்ட மூன்று சந்தர்ப்பங்களைப் இவ்வுருக்கள் காட்டுகின்றன. இத்தகவல்களுக்கேற்ப, கனவுருவினதும் உருளையினதும் மொத்த நிறை,

(1) 5kg (2) 7kg (3) 2kg

www.kcedu.lk

(20) "இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை" இப்பழமொழியின் கருத்து,

(1) காலம் மாறும் (2) திருப்தியற்ற மனம் (3) விடாமுயற்சி பலன் தரும்

(21) பின்வரும் குறியீட்டு வரிசைகளில் இரண்டு குறியீட்டு வரிசைகள் சமனாகும். அதன்படி, வித்தியாசமான குறியீடுகளைக் கொண்ட வரிசையினைத் தெரிவு செய்க.

(1) ⊕ △ ↑ ✳ ⊓ ⌓ ↔ (2) ✳ ↔ ⊕ ⊓ △ ⌓ ↑ (3) ⊔ ⊕ ✳ ▽ ↔ ↑ ⌓


(22) மாதமொன்றில் 1 ஆம் திகதி பிறந்த தம்பிக்கு அடுத்த மாதம் 31 ஆம் திகதி வயது 62 நாட்களாகும். அதன்படி, தம்பி பிறந்த மாதம்,

(1) செப்டெம்பர் (2) நவம்பர் (3) ஜூலை



(23) தம்பியின் பெயர் நாதன் அல்ல. அண்ணா என்னை கவின் என அழைப்பார். அதன்படி, எங்கள் மூவரில் டில்சான்,

(1) தம்பி (2) அண்ணா (3) நான்

(24) பின்வரும் 1, 2 ஆகிய உருக்களுக்கிடையிலானத் தொடர்பின்படி, 3 ஆவது உருவிற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



உரு 1 உரு 2 உரு 3

(1)  (2)  (3) 

(25) "வசீம் ஆண் பிள்ளையாவான். வசீம் எனது பாடசாலையில் கல்வி கற்கின்றான். எனது தங்கையும் நான் கல்வி கற்கும் பாடசாலையிலேயே கல்வி கற்கின்றாள்." அதன்படி, பின்வரும் கூற்றுக்களுள் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) வசீம் எனது வகுப்பில் கல்வி கற்கின்றான். (2) நான் ஒரு ஆண் பிள்ளையாவேன்.

(3) எனது பாடசாலையில் பெண் பிள்ளைகளும் கல்வி கற்கின்றனர்.

(26) பெரும்பாலான வீடுகளில் மின்சாரத்தின் மூலம் பெறப்படும் பிரதான பயன்பாடு,

(1) உணவு சமைப்பதற்காகும். (2) ஒளியைப் பெற்றுக்கொள்வதற்காகும். (3) பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்காகும்.

(27) "ஒருவரின் வயது படிப்படியாக அதிகரிக்கும்போது உயரமும் படிப்படியாக அதிகரிக்கும்." இக்கூற்று,


(1) பிழையானது. (2) சரியானது. (3) கூறமுடியாது.

(28) கீழே தரப்பட்டுள்ள விபரத்தினை நன்றாக வாசிக்குக.


"ஒரு குடும்பத்தில் இருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை 3 ஆகும். அவர்களில் இருவர் மட்டுமே திருமணமானவர்கள். மூன்று பிள்ளைகளினதும் பெற்றோருக்கு நான்கு பேரப்பிள்ளைகள் உள்ளனர்."

இவ்விபரத்தினைச் சரியாகக் காட்டும் உருவப்படத்தைத் தெரிவு செய்க. (குடும்பத்திலுள்ள நபர்களின் பெயர்கள் ஆங்கில எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளன.)


(1)




(2)



(3)




(29)



ஒரேயளவான சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் இப்பெரிய கனவுரு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இப்பெரிய கனவுருவில் ஒரு முகமேனும் வெளியே புலப்படாத சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 1 (2) 2 (3) 3

(30)



A உருவில் காட்டப்பட்டுள்ளபடி, பாத்திரமொன்று அரிசியினால் முழுமையாக நிரப்பப்பட்டு நிறையை அளவிட்டபோது அதன் நிறை 7kg ஆகும். B உருவில் காட்டப்பட்டுள்ளபடி, அப்பாத்திரத்தில் அரைவாசி அரிசியினால் நிரப்பப்பட்டு நிறையை அளவிட்டபோது அதன் நிறை 4kg ஆகும். அதன்படி, வெற்றுப்பாத்திரத்தின் நிறை,

(1) 2kg (2) 500g (3) 1kg

www.ikeou.lk


(31) ஒரு குறித்த பண்டிகைக்கு எல்லா பிள்ளைகளும் பழங்கள் கொண்டுவந்தனர். சில பிள்ளைகள் கேக் கொண்டுவந்தனர். அதன்படி, பின்வரும் கூற்றுகளுள் பிழையான கூற்று,

(1) கேக் கொண்டுவந்த அனைத்து பிள்ளைகளும் பழங்கள் கொண்டுவந்தனர்.

(2) பழங்கள் கொண்டுவந்த அனைத்து பிள்ளைகளும் கேக் கொண்டுவந்தனர்.

(3) சில பிள்ளைகள் கேக் மற்றும் பழங்கள் ஆகிய இரு வகைகளையும் கொண்டுவந்தனர்.

(32)



அருகேயுள்ள உருவப்படத்தினால் சில நபர்களுக்கிடையிலான தொடர்புகள் காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவின்படி, ரவியின் சகோதரன் சிவகுமார் ஆவார். அதன்படி, ராஜாவின் பாட்டன்,

(1) நாதன் (2) கதிர் (3) பாலா

(33) கடிகாரமொன்றின் செக்கன் முள் 60 தடவைகள் சுழலும்போது அதன் நிமிட முள் சுழலும் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 2 (2) 1 (3) 4

(34) வாங்கு ஒன்றில் 13 பிள்ளைகள் அமர்ந்திருந்தனர். சியானாவின் வலது கைப்பக்கத்தில் 8 பிள்ளைகளும் சியானாவின் இடது கைப்பக்கத்தில் 4 பிள்ளைகளும் அமர்ந்திருந்தனர். பாத்திமாவின் வலது கைப்பக்கத்தில் 3 பிள்ளைகளும் இடது கைப்பக்கத்தில் 9 பிள்ளைகளும் அமர்ந்திருந்தனர். அதன்படி, சியானாவிற்கும் பாத்திமாவிற்கும் இடையில் அமர்ந்திருந்த பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 3 (3) 5

(35) ஆசிமின் கடிகார நேரம் எப்பொழுதும் சரியான நேரத்தை விட 15 நிமிடங்கள் குறைவாகக் காட்டும். சிலாபம் புகையிரத நிலையத்திலிருந்து புகையிரதம் சரியாக மு.ப 6.15 இற்கு புறப்படும். ஆசிமின் கடிகார நேரம் சரியாக மு.ப 6.10 ஐக் காட்டும்போது அவன் புகையிரத நிலையத்திற்குச் சென்றான். அதன்படி,

(1) அவரால் புகையிரதத்தில் ஏற முடிந்தது. (2) அவரால் புகையிரதத்தில் ஏற முடியவில்லை.

(3) அவரால் புகையிரதத்தில் நின்றுகொண்டு செல்ல வேண்டியிருந்தது.

(36) ஒரு பாடசாலைக்கு 5 வருடங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கைத் தொடர்பான விபரம் கீழே அட்டவணையின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

2017	2018	2019	2020	2021
25	35	45	55	65

பிள்ளைகள் சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையின் கோலத்திற்கேற்ப 2015 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 15 (2) 10 (3) 5

(37) புத்தகமொன்றின் 84 பக்கங்கள் உள்ளன. நான் அப்புத்தகத்தின் அரைவாசியை விட 18 பக்கங்கள் அதிகமாக வாசித்துள்ளேன். அதன்படி, இன்னும் எனக்கு வாசிப்பதற்கு உள்ள பக்கங்களின் எண்ணிக்கை,

(1) 24 (2) 22 (3) 14

(38) V X I இங்கு உரோம எண்குறிகள் எழுதப்பட்டுள்ள மூன்று கார்ட்போர்ட் அட்டைகள் காட்டப்பட்டுள்ளன. இம் மூன்று கார்ட்போர்ட் அட்டைகளையும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணினதும் மிகச் சிறிய எண்ணினதும் கூட்டுத்தொகை,

(1) 18 (2) 30 (3) 24

(39) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா - அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா!
இம்பருலகின் இயல்பிதம்மா! - மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா?

இப்பாடலில் "தாமரை" என்பதனை வெளிப்படுத்தும் சொல்,

(1) அம்புயம்

(2) ஆம்பல்

(3) அயல்

(40) நான்முகியொன்றின் முகமொன்று சிவப்பு நிறத்திலும் இன்னுமொரு முகம் பச்சை நிறத்திலும் ஏனைய சகல முகங்களும் மஞ்சள் நிறத்திலும் நிறந்தீட்டப்பட்டது. அதன்படி, மஞ்சள் நிறத்தில் நிறந்தீட்டப்பட்ட முகங்களின் எண்ணிக்கை நான்முகியில் உள்ள மொத்த முகங்களின் எண்ணிக்கையின் என்ன பங்காகும்?

(1) $\frac{2}{3}$ (2) $\frac{3}{4}$ (3) $\frac{1}{2}$

www.ikeou.lk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-15

வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
*** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
*** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

பாலை மோரைத் தந்து நிதம் வண்டிச்சவாரி செய்வதற்கும்
பண்பாய் பழகும் பசுபோல வயலை நன்றாய் உழுவதற்கும்
ஞாலம் தன்னில் நாம் காணும் பண்டைக் காலம் உதவியது
நல்ல மிருகம் வேறுண்டோ? பயன் சேர் எருது மாடன்றோ

(i) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடைமொழிச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக. .....

(ii) "பூமி" என்பதற்குரிய ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக. .....

(iii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள உயர்திணை தன்மைப் பெயர்ச்சொல்லை எழுதுக. .....

(iv) வயலை உழுவதற்கு பயன்படும் கருவி எது? .....

(v) இடப்பெயர்ச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக. .....

(vi) இப்பாடலில் வந்துள்ள நிறுத்தக்குறியின் பெயரை எழுதுக. .....

(02) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் சரியான பழமொழியாக எழுதுக.

நினைக்கத் / ஒன்று / நாமொன்று / நினைத்தது / தெய்வம் :- .....

(03) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள்ளிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) நாம் பெரியோரைக் ..... (கனம் / கணம்) பண்ண வேண்டும்.

(ii) குழந்தையின் ..... (அரையில் / அறையில்) தங்கச்சங்கிலி இருந்தது.

(04) பின்வரும் சொற்தொகுதிகள் ஒவ்வொன்றிலும் சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லை தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) மருத்துவர்கல் / மறுத்துவர்கள் / மருத்துவர்கள் (ii) வேண்டுகோள் / வேன்டுகோள் / வேண்டுகோல்

(05) கீழே இலங்கையின் தேசியக் கீதத்தின் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது. அதிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை வெற்றிடங்களில் எழுதுக.

நல்லெழில் பொலி .....

நலங்கள் யாவும் நிறை ..... லங்கா

ஞாலம் ..... வள வயல் நதி ..... மலர்

நறுஞ்சோலை கொள் லங்கா.

(06) பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களினால் தரப்பட்டுள்ள சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ளச் சொற்களைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) பயிர்களுக்கு **இயற்கை** உரங்களை இடவேண்டும். (ஏற்றுமதி / செயற்கை / அசுத்தம்)

(ii) சிறுவன் மேசையைத் **தள்ளினான்.** (கவிழ்த்தான் / விழுந்தான் / இழுத்தான்)

(07) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான இணைமொழியை அடைப்பினுள்ளிருந்து தெரிவுசெய்து உரிய வெற்றிடங்களில் எழுதுக.

(சீரும் சிறப்புமாக , பேரும் புகழும் , ஆடிப் பாடி)

(i) அவரின் ..... உலகெங்கும் பரவியது.

(ii) கிராமிய மக்கள் தமது வேலைகளை ..... மகிழ்ச்சியாக செய்தார்கள்.

(iii) கண்ணன் ..... வாழ்ந்து வந்தான்.

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk


(08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திலுள்ள அடைமொழிகளை தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

நல்ல மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் கவனமாகப் படிப்பார்கள். .....

(09) கீழே முதலில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லிற்கும் சமனற்றச் சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) அழகு :- (வனப்பு , அலங்கோலம் , எழில்) (ii) துன்பம் :- (அல்லல் , இன்னல் , இன்பம்)

(10) தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துப் புதிரைப் பூரணப்படுத்துக.



இடமிருந்து வலம் :-

(1) விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது.

(2) தென்னை ; குரும்பை அதுபோல மா ; .....

மேலிருந்து கீழ் :-

(1) இந்து மக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்று,

(3) "இகழ்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,

